இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண் 762/2012

வஹிதா ... மேல்முறையீட்டாளர்(கள்)

-எதிர்-

தமிழ்நாடு மாநில அரசு ... எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. தினேஷ் மகேஸ்வரி:

1. சிறப்பு அனுமதி மூலமான இந்த மேல்முறையீடானது, குற்றவியல் மேல்முறையீடு எண் 1/2010-இல் 09.03.2010 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் உயர் நீதிமன்றமானது, அமர்வு வழக்கு எண் 9/2008-இல் பெரம்பலூர் மகளிர் நீதிமன்ற அமர்வு நீதிபதியால் 15.10.2009 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட குற்ற மற்றும் தண்டனைத் தீர்ப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்து, இந்திய தண்டனைச் சட்டம், 1860[1] (இ.த.ச.) பிரிவு 302-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக மேல்முறையீட்டாளரை குற்றவாளி என உறுதிசெய்து, அவருக்கு ஆயுள் தண்டனையும், தவறுகை நிபந்தனைகளுடன் ரூ. 2000/- அபராதத்தையும் தீர்வளித்திருந்தது.

2. இவ்வழக்கின் சுருக்கம் யாதெனில், மேல்முறையீட்டாளர் அவரது ஐந்து வயதுடைய குழந்தையை 21.06.2007 அன்று காலை பெரம்பலூரிலுள்ள அவரது மாமியாரின் வீட்டில் கொலை புரிந்ததற்காக தண்டிக்கப்பட்டார். மேலும், அரசுத்தரப்பு வழக்குப்படி, மேல்முறையீட்டாளரின் கணவர் வாழ்வாதாரப் பொருள் ஈட்டுவதற்காக அயல்நாட்டில் வாழ்ந்துவந்தார் என்றும், மேல்முறையீட்டாளர் பெரும்பாலும் கொல்லக்குடியிலுள்ள

---

1. சுருக்கமாக 'இ.த.ச.'

அவரது தந்தை வீட்டிலேயே இருந்துவந்தார். ஆயினும், குழந்தையை வளர்ப்பதற்காகவும், குழந்தையின் கல்விக்காகவும், அவர் அவரது மாமியாரின் வீட்டில் வசிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டார், தனித்து வாழும் அவரது இச்சைக்கு குழந்தை ஒரு தடையாக இருப்பதாகக் கருதி, அவரது மாமியார் வீட்டைவிட்டுச் சென்ற பின்னர், குழந்தையின் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டார். மேல்முறையீட்டாளரை கடைசியாக குழந்தையுடன் கண்டதாகவும், அவரது மாமியாரும், மற்ற சாட்சிகளும் குற்றம் நிகழ்ந்த இடத்திற்கு வந்தவுடன் அவர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டதாகவும், பின்னர் பிற்பகலில் அவர் பெரம்பலூரிலுள்ள புதிய பேருந்து நிலையத்தில் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. சடலக்கூறாய்வு அறிக்கையின்படி, கழுத்து நெரிக்கப்பட்டதன் காரணமாகவே மூச்சுத்திணறல் ஏற்பட்டு குழந்தையின் மரணம் விளைந்தது என்பதாகும். விசாரணையின்போது அரசுத்தரப்பு சாட்சியங்களில் ஒருவரைத் தவிர மற்ற அனைவரும் மேல்முறையீட்டாளர் மீதான குற்றச்சாட்டுகளை ஆதரித்தனர். மேல்முறையீட்டாளரின் தந்தை மட்டுமே மாறான சாட்சியம் அளித்தார், தொடர்புடைய சமயத்தில் மேல்முறையீட்டாளர் தன்னுடன் கொல்லக்குடியில் இருந்ததாகவும், குழந்தையின் மரணம் குறித்த தகவலைப் பெற்ற பின்னரே அவர், அவரை பெரம்பலூருக்கு அழைத்துச் சென்றதாகவும் சாட்சியமளித்தார். விசாரணை நீதிமன்றம் சாட்சியங்களை மதிப்பீடு செய்ததன்பேரில், 15.10.2009 தேதியிடப்பட்ட அதன் தீர்ப்புரையின் மூலம் குற்றஞ்சாட்டப்பட்டவர்/மேல்முறையீட்டாளரின் சார்பாக முன்வைக்கப்பட்ட வேற்றிட வாதங்களை நிராகரித்தது. மேலும், கழுத்து நெரிக்கப்பட்டதன் காரணமாக மூச்சுத்திணறல் ஏற்பட்டு மரணமுற்ற குழந்தை மேல்முறையீட்டாளருடன் கடைசியாகக் காணப்பட்டதால், அவர் குழந்தையின் மரணம் குறித்த சூழ்நிலைகளை விளக்கத் தவறிவிட்டார் என்று முடிவு செய்தது. எனவே, இ.த.ச., பிரிவு 302-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக மேல்முறையீட்டாளருக்கு தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டது. மேல்முறையீட்டிலும், உயர் நீதிமன்றம்/விசாரணை நீதிமன்றத்தின் தீர்முடிவுடன் ஒத்திசைந்து,

மேல்முறையீட்டாளரின் குற்றமுறு தன்மையை நிலைநாட்டுகின்ற ஆக்கக்கூறுகள் அடிப்படையில் தெளிவாக நிறுவப்பட்டன என்று தீர்மானித்தது.

2.1. இந்த மேல்முறையீட்டில், மேல்முறையீட்டாளர்தான் அவரது சொந்த குழந்தையைக் கொன்றார் என்ற ஒரே ஊகக்கருத்துக்கு இடங்கொடுக்கும் தொடர்ச்சியாக நம்பக்கூடிய சூழ்நிலைகளை அரசுத்தரப்பு நிரூபிக்கத் தவறியுள்ளது என்ற காரணத்தின்பேரில், அரசுத்தரப்பு சாட்சிகளின் வாதக்கூறுகளில் குறிப்பிட்டளவில் முரண்பாடுகள் உள்ளன எனக் குறிப்பிட்டு, இரு நீதிமன்றங்களின் ஒருங்கியல்வான காண்முடிவுகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டன. அரசுத்தரப்பின் சாட்சியமும், இரு நீதிமன்றங்களின் காண்முடிவுகளும் வாதுரைகளுடன் சேர்க்கப்பட்டன.

3. முன்வைக்கப்பட்டுள்ள வாதுரைகளையும், தீர்மானிப்பதற்காக எழுந்துள்ள வினாக்களையும் கருத்திற்கொண்டு பார்க்கையில், நாங்கள் தொடர்புடைய சங்கதிகளையும், அதன் பின்புல அம்சங்களையும் பின்வருமாறு குறிப்பிடுகிறோம்:

3.1. இவ்வழக்கானது, மரணமுற்ற குழந்தை அதன் சொந்த தாயாரால் அதாவது மேல்முறையீட்டாளரால் கொல்லப்பட்டது என்று மேல்முறையீட்டாளரின் மாமியார் அ.சா.1-பஷீரா, 21.06.2007 அன்று காலை 9.00 மணியளவில் பெரம்பலூர் காவல் நிலையத்தில் அளித்த தகவலின்பேரில் முதல் தகவல் அறிக்கை[2] (மு.த.அ.) எண் 328/2007-ஆனது பதிவு செய்யப்பட்டது. மு.த.அ.-இலுள்ள தொடர்புடைய கூற்றுகள், பெரம்பலூர், காவல்துறை துணை ஆய்வாளர் சுப்புலஷ்மி-அ.சா.10-ஆல் எழுதப்பட்டது, அது பின்வருமாறு:[3]

> "....எனது பேத்திக்கு 5 வயதாகிவிட்டதால் மகன் ரியாத்திலிருந்து கொல்லக்குடியிலுள்ள எனது மருமகளிடம் பேசி குழந்தையின் கல்விக்காக பெரம்பலூரிலுள்ள எனது வீட்டிற்கு வந்து அங்கேயே தங்கும்படி கூறினான். எனவே, 18.06.2007 அன்று வஹிதாவையும்,

---

2. சுருக்கமாக 'மு.த.அ.'

3. இத்தீர்ப்புரையில் எடுகுறிப்பிடப்பட்டவை கோப்பில் வைக்கப்பட்டுள்ள மொழியாக்கம் செய்யப்பட்ட நகல்களிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

எனது பேத்தி பர்ஹானாவையும் அவரது தந்தை கொண்டுவந்து பெரம்பலூரிலுள்ள எனது வீட்டில் விட்டுவிட்டார். அவள் வந்து இரண்டு நாட்கள் ஆகியும், அவள் சரியாக சாப்பிடவோ என்னிடம் பேசவோ இல்லை. அவள் என்னிடம் சண்டையிட்டுக்கொண்டு கொல்லக்குடிக்கு போகப்போவதாகக் கூறினாள், கொல்லக்குடிக்கு போகக்கூடாது என அவளை எச்சரித்தேன், அதற்கு அவள், இந்தக் குழந்தையின் காரணமாகவே என்னால் அமைதியாக வாழமுடியவில்லை; எனது கணவரும் என்னை சந்தேகிக்கிறார்; நீங்களும் என்னை கொல்லக்குடிக்கு செல்ல அனுமதிப்பதில்லை. இந்தக் குழந்தையைத் தீர்த்துக்கட்டினால்தான் நான் அமைதியாக வாழமுடியும் என்று கூறினாள். நான், எனது மகள் மும்தாஜ், எனது 2-வது மருமகள் ஆஷா மற்றும் எனது அண்டைவீட்டுக்காரர் கமலா ஆகியோர் ஒன்றாகச் சேர்ந்து 20.06.2007 அன்று இரவு அவளை எச்சரித்தோம். 21.06.2007 அன்று காலை 8.00 மணியளவில், நான் சென்று குழந்தைக்கு இட்லி வாங்கிவருவதாகக் கூறினேன். நான் இங்கிருந்து எனது குழந்தையைப் படிக்கவைக்க முடியாது, எனவே நான் கொல்லக்குடிக்கு செல்லவேண்டும் என்று அவள் கூறினாள். எனவே, எனக்கும், எனது மருமகள் வஹிதாவுக்கும் இடையே சண்டை ஏற்பட்டது. பார்க்கலாம் என அவளிடம் கூறிவிட்டு இட்லி வாங்குவதற்காக நான் சென்றுவிட்டேன். அந்த நேரத்தில், என் மகள் மும்தாஜ் மற்றும் எனது மருமகள் ஆஷா என்னைப் பார்ப்பதற்காக வந்தனர். நான் இட்லி வாங்குவதற்காக வீட்டைவிட்டுச் சென்றபோது பணம் எடுக்காததால் பணம் எடுப்பதற்காக அவர்களுடன் சேர்ந்து வீட்டுக்குச் சென்றேன். அந்த நேரத்தில் எனது மருமகள் வஹிதா அவளது புடவையின் முந்தியால் ஐந்து வயதுடைய

எனது பேத்தி பர்ஹானாவின் கழுத்தைச் சுற்றி நெரிக்க முயன்றாள். அதைப் பார்த்தவுடன், எதற்காக எனது பேத்தியைக் கொல்கிறாய் என்று கத்தினேன். எனது பேத்தியின் கழுத்தை நெரித்ததுடன், எங்களையும் தள்ளிவிட்டு வாசல் வழியே ஓடிவிட்டாள். எனது அலறலைக் கேட்டு அண்டைவீட்டாரான கமலாவும் ஜெயராமனும் ஓடி வந்தனர். நான் குழந்தையைத் தொட்டுப்பார்த்தேன். அவள் இறந்துவிட்டாள்....”

3.2. முதல் தகவல் அறிக்கையான (அ.சா.ஆ.10) பதிவு செய்யப்பட்டப் பின்னர், முதல் புலனாய்வு அலுவலர்[4] அ.சா.12-திரு. ஜி. அய்யனார், சம்பவ இடத்துக்கு வந்து, சடலத்தின் புகைப்படங்கள் (அ.சா.ஆ.11), தோராய வரைபடம் (அ.சா.ஆ.12), சடல விசாரணை அறிக்கை (அ.சா.ஆ.13) ஆகியவற்றை தயார் செய்ததுடன், சடலக்கூறாய்வுக்காக அதை அனுப்பிவைத்தார். சடலக்கூறாய்வு அறிக்கையில் (அ.சா.ஆ.5), 20 செ.மீ. நீளமும், 2 செ.மீ. அகலமும் கொண்ட காயம், பலியான குழந்தையின் கழுத்தில் இருந்தது என்றும், பலியான குழந்தை கழுத்து நெரிக்கப்பட்டதன் காரணமாகவே மூச்சுத் திணறல் ஏற்பட்டு இறந்துவிட்டது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

3.3. முதல் புலனாய்வு அலுவலரான திரு. ஜி. அய்யனார்-அ.சா.12, சம்பவம் நிகழ்ந்து சுமார் ஒன்பது மணிநேரம் கழித்து, பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள பெண்கள் கழிவறைக்கு அருகே மாலை சுமார் 5.00 மணியளவில் மேல்முறையீட்டாளரை கைது செய்தார். மேல்முறையீட்டாளர் கைது செய்யப்பட்டப் பின்னர், குழந்தையின் கழுத்தை நெருக்கிய புடவையை அவர் அடையாளம் காட்டினார், இரத்தக் கறை கொண்ட அந்தப் புடவை சான்றொப்பமிட்ட சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. மேல்முறையீட்டாளர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார், அது சாட்சிகளின் முன்னிலையில் அ.சா.12-ஆல் பதிவுசெய்யப்பட்டது. அதன் பின்னர், அ.சா.14-திரு. டி. சிவசுப்பிரமணியன் என்பவரால் விசாரணை

---

4. சுருக்கமாக 'பு.அ.'

மேற்கொள்ளப்பட்டது. அவர் இ.த.ச., பிரிவு 302-இன் கீழான குற்றத்திற்காக மேல்முறையீட்டாளருக்கு எதிராக குற்ற அறிக்கையைத் தாக்கல் செய்தார். வழக்கு மேல்விசாரணைக்காக அனுப்பப்பட்ட பின்னர், மேல்முறையீட்டாளர் குற்றச்சாட்டுகளை மறுத்ததன்பேரில், வழக்கானது, பெரம்பலூர், மகளிர் நீதிமன்றத்தின் அமர்வு நீதிபதியால் அமர்வு வழக்கு எண் 9/2008-ஆக விசாரிக்கப்பட்டது.

4. விசாரணையின்போது, அரசுத்தரப்பால் மொத்தம் பதினான்கு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். முதல் சாட்சியான மேல்முறையீட்டாளரின் மாமியாரும் தகவல் அளித்தவருமான அ.சா.1-பஷீரா சம்பவம் குறித்த முக்கிய சாட்சியாக விசாரிக்கப்பட்டார். மற்ற நான்கு சாட்சிகளான, அ.சா.1-இன் மகள் மும்தாஜ்-அ.சா.2, அ.சா.1-இன் மற்றொரு மருமகள் ஆஷா பேகம்-அ.சா.3, அ.சா.1-இன் வீட்டின் உரிமையாளரான ஷர்புனிஷா-அ.சா.4, அ.சா.1-இன் அண்டைவீட்டாரான திரு-ஜோதி-அ.சா.5 ஆகியோர் சம்பவம் நிகழ்ந்ததையடுத்து, அங்கு உடனடியாக சென்ற சாட்சிகளாகக் கூறப்பட்டனர். அ.சா.8-மருத்துவர் சரவணன் மற்றும் அ.சா.13-மருத்துவர் எ. கார்த்திகேயன் ஆகியோர் முறையே சடலக்கூறாய்வு அறிக்கை மற்றும் மரணமுற்ற குழந்தையின் நாவடி குருத்தெலும்பு குறித்த அறிக்கை தொடர்பாக சாட்சியமளித்தனர். விசாரணை நடவடிக்கைகள் தொடர்பாக கிராம நிருவாக அலுவலரான அ.சா.9-தேவராஜ் மற்றும் அ.சா.7-சாதிக் அலி ஆகியோர் சான்றொப்பச் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். அ.சா.10-சுப்புலட்சுமி, அ.சா.-1 இன் வாக்குமூலத்தைப் பதிவு செய்து, மு.த.அ.-ஐ எழுதினார். மேலும் அ.சா.-11-ஆன முகமது முன்வர் கான் சம்பவம் நடந்த இடத்தில் புகைப்படம் எடுத்த நிழற்படக் கலைஞராவார். குறிப்பிடப்பட்டவாறு, அ.சா.12-ஆன திரு. ஜி. அய்யனார் முதல் விசாரணையைத் தொடங்கினார் மற்றும் அ.சா.14-ஆன பெரம்பலூர் காவல் ஆய்வாளரான திரு. டி. சிவசுப்பிரமணியன் விசாரணையை முடித்து, குற்ற அறிக்கையைத் தாக்கல் செய்தார். அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவான சாட்சிகளைத் தவிர, முரணான சாட்சியமளித்த மேல்முறையீட்டாளரின் தந்தையான ஜமால் முகமத்-அ.சா.6 மற்றொரு

சாட்சியாவார். அவர், மேல்முறையீட்டாளர் தன்னுடன் கொல்லக்குடியில் இருந்ததாக உறுதிப்படுத்தினார். அதாவது, இந்த சாட்சி மேல்முறையீட்டாளரின் வேற்றிடவாதத்திற்கு ஆதரவளித்தார்.

5. தற்போதைய மேல்முறையீட்டிற்கு ஒட்டுமொத்த அரசுத்தரப்பு சாட்சியத்தின் விளக்கம் தேவைப்படவில்லை என்றபோதிலும், வலியுறுத்தப்பட்ட வாதுரைகளைக் கருத்திற்கொண்டு பார்க்கையில், குறிப்பாக, அரசுத்தரப்பு சாட்சிகளின் கூற்றுகளிலுள்ள சில முரண்பாடுகள்/வேறுபாடுகளைப் பொறுத்தவரையிலும், மேலும், மேல்முறையீட்டாளரின் வேற்றிடவாதத்தைப் பொறுத்தவரையிலும் தொடர்புடைய வாக்குமூலங்களின் பகுதியை நாம் கருத்திற்கொள்ளலாம்.

5.1. அ.சா.1-பஷீரா, அரசுத்தரப்பின் முக்கிய சாட்சியாவார். அவரது சாட்சியத்தில், அவரது மகனான அப்துல் ரஹீம், மேல்முறையீட்டாளரை மணம்புரிந்துள்ளார்; திருமணத்திற்குப் பின்னர் மேல்முறையீட்டாளருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளது; அப்துல் ரஹீம் ஈட்டிய அனைத்து வருமானத்தையும் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பிவைத்தார். அப்துல் ரஹீம் அவரை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அவரது மகளை பெரம்பலூரிலுள்ள பள்ளியில் சேர்க்கும்படி கூறி, அவர் அதற்கான பணத்தையும் அனுப்புவதாகக் கூறினார். அதைத் தொடர்ந்து, 18.06.2007 அன்று மேல்முறையீட்டாளரின் தந்தையான அ.சா.6-திரு. ஜமால் முகமத், அப்துல் ரஹீம் தனது மகளுக்கு பணம் ஏதும் அனுப்புவதில்லை எனவும், குழந்தையை பெரம்பலூரி படிக்கவைக்கும்படியும் கூறி, மேல்முறையீட்டாளரையும் அவரது குழந்தையையும் பெரம்பலூரிலுள்ள அ.சா.1-இன் வீட்டில் விட்டுவிட்டார். 21.6.2007 அன்று காலை மேல்முறையீட்டாளர், அவரிடம் ரூ.100 கொடுத்து இட்லி வாங்கிவரும்படி கேட்டுக்கொண்டார். அவர் வீட்டுக்கு திரும்பிவந்தபோது மேல்முறையீட்டாளர் குழந்தைக்கு அருகில் அமைதியாக உட்கார்ந்திருந்தார். அவர் கேட்டதற்கு குழந்தையைக் கொன்றுவிட்டதாகக் கூறினார். குறுக்கு விசாரணையின்போது, சம்பவம் நிகழ்ந்த உடனேயே அவர்

மேல்முறையீட்டாளருடன் காவல் நிலையத்திற்குச் சென்றதாகவும் கூறினார். அவரது வாக்குமூலத்தின் தொடர்புடைய பகுதி பின்வருமாறு:-

> "...10 மாதங்களுக்கு முன்பு, 6-ஆவது மாதத்தின் 18-ஆவது நாளில், எனது மருமகளின் தந்தை ஜமால் முகமத் தனது மகளான முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரையும், எங்கள் பேத்தியையும் பெரம்பலூரில் உள்ள எனது வீட்டிற்கு அழைத்து வந்திருந்தார். எனது மருமகளின் தந்தை தனது மகளான முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் மறுநாள் 19 அன்று அவர் தனது கிராமத்திற்கு போவதாகவும், அவளே அனைத்தையும் கவனித்துக்கொள்ளவேண்டும் என்றும் கூறினார். முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவர் அவரது தந்தையிடம் தான் கவனித்துக்கொள்வதாகக் கூறினாள். மறுநாள் 19-ஆம் தேதி, குற்றஞ்சாட்டப்பட்டவரின் தந்தை தனது கிராமத்திற்கு திரும்பினார். அதற்கு அடுத்த நாள் 20-ஆம் தேதி புதன்கிழமை அன்று நாங்கள் சமைத்து சாப்பிட்டுவிட்டு எனது மகள் மும்தாஜ் வீட்டில் இருந்தோம்..... .நான் அவளது வீட்டிலிருந்து 4 அல்லது 5 வீடுகள் தள்ளி தனியாக வசித்து வருகிறேன். (சாட்சிகள் அதையே திரும்பக்கூறினர்) நான், முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் அவளது மகளுடன் எனது வீட்டிற்கு வரும்படி கூறியதுடன், பேத்தியை நாம் பள்ளியில் சேர்க்கலாம் என்றும் கூறினேன். குற்றஞ்சாட்டப்பட்டவர் அதற்கு ஒப்புக்கொண்டாள், புதன்கிழமை அன்று இரவு, நான், குற்றஞ்சாட்டப்பட்டவர், எனது பேத்தி பர்ஹானா ஆகிய மூவரும் தூங்குவதற்காக நான் வாடகைக்கு எடுத்திருந்த வீட்டுக்குச் சென்றோம். மறுநாள் காலை சுமார் 6 மணிக்கு நான் பால் வாங்க பால் சங்கத்திற்குச் சென்றேன். நான் பால் வாங்கி, தேநீர் தயாரித்து அவளுக்கு கொடுத்தேன். அதன்பின்னர், நான்

அவளிடம் இறைச்சி வாங்கி வருவதாகக் கூறினேன். அதற்கு முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவர் இறைச்சி வாங்கத் தேவையில்லை என்றும், என்னிடம் ரூ.100/-ஐ கொடுத்து இட்லி வாங்கிக் கொடுக்கும்படியும் கூறினாள். காலை 7.00 மணியளவில் நான் விவசாயச் சந்தைக்கு வந்தேன். அதற்கு சிறிது நேரம் எடுத்தது. அதற்குள் எனக்கு ரூ.100/-க்கான சில்லறை கிடைத்ததால் இட்லி வாங்கிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினேன். அதே நாளான, அதாவது 21-ஆம் தேதி காலை 6.00 மணிக்கு எனது மகன் அப்துல் ரஹீம் வெளிநாட்டிலிருந்து எனது மகள் மும்தாஜிற்கு தொலைப்பேசி மூலம் தொடர்புகொண்டான். இட்லி வாங்கி வீடு திரும்பும் வழியில் எனது மகளின் வீடு அமைந்துள்ளதால், இத்தகவல் வரும்வழியில் எனது மகள் மும்தாஜிடமிருந்து எனக்கு கிடைத்தது.... நான் இட்லி வாங்கிவிட்டு வீட்டி சென்றேன். நான் ஒரு குவளையில் வைத்திருந்த தேநீர் அப்படியே இருந்தது. அந்த தேநீரை நான் எனது பேத்திக்காக வைத்திருந்தேன். அது அப்படியே இருந்தது. அந்தச் சமயத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவரான வஹிதா அங்கு படுத்திருந்த எனது பேத்திக்கு அருகே உட்கார்ந்திரு தாள். நான் அவளிடம் மும்தாஜ் என்னிடம் கூறிய விவரங்களைக் கூறி, எனது பேத்தியை எழுப்பி அவளுக்கு தேநீர் தருமாறு கூறினேன். அதற்கு குற்றஞ்சாட்டப்பட்டவர் அமைதியாக இருந்தார். எனது பேத்தியை பள்ளியில் சேர்ப்பதைப் பற்றி குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் நான் கூறிக்கொண்டிருந்தபோது, எனது மகன் அப்துல் ரஹீமுடன் அவள் தொலைபேசியில் பேசவேண்டும் என்று கூறினாள், குற்றஞ்சாட்டப்பட்டவர் என்னிடம் காவல் நிலையம் எங்குள்ளது எனக் கேட்டாள். அதற்கு "நான் உன்னிடம் என்ன சொல்லிக்

கொண்டிருக் றேன், நீ என்னிடம் என்ன கேட்டுக்கொண்டிருக்கிறாய்" என்று நான் குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் கேட்டேன். அதற்கு முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது மகளை கொன்றுவிட்டதாகக் கூறினாள். "தான் பெற்ற குழந்தையை எந்தத் தாயும் கொல்லமாட்டாள், நீ பொய் சொல்கிறாய்" என்று நான் அவளிடம் கூறினேன். அதற்கு முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவர், உண்மையாகவே தான்தான் குழந்தையைக் கொன்றதாகக் கூறினாள். குற்றஞ்சாட்டப்பட்டவர் பொய்யுரைப்பதாக நான் மீண்டும் அவளிடம் கூறியபோது, எனது மகள் மும்தாஜும், எனது நடு மருமகள் ஆஷா பேகமும் என் வீட்டிற்குள் வந்தனர். "நீ பொய் கூறுகிறாய்" என்று குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் நான் மீண்டும் கூறினேன். மேலும் அவளிடம், குழந்தையை எழுப்புமாறு கூறினேன். ஆனால், குற்றஞ்சாட்டப்பட்டவர் தான் குழந்தையைக் கொன்றுவிட்டதாக மீண்டும் கூறினாள், நான் எனது பேத்தியின் தலையை அசைத்துப் பார்த்தேன். எனது பேத்தியின் மூக்கிலிருந்து இரத்தம் வழிந்தது. எனது பேத்தி பர்ஹானா இறந்துவிட்டாள். எனது பேத்தி இறந்துவிட்டதைப் பார்த்து நான் வெளியே வந்து கூச்சலிட்டபோது, நான் ஏற்கெனவே கூறியதுபோல, எனது மகள் மும்தாஜும், நடு மருமகள் ஆஷா பேகமும் அங்கு வந்தனர். மக்களும் கூடினர். எனக்கு மயக்கம் வந்தது. அவர்கள் என்னை அண்டை வீட்டுக்கு அழைத்துச் சென்று, அங்கு என்னை உட்காரவைத்தனர். அன்வர் பாஷா தொலைபேசி மூலம் தொடர்புகொண்டார். காவல்துறை அதிகாரிகள் எங்கள் வீட்டிற்கு வந்தனர். அவர்கள் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்து விசாரித்தனர். நடந்ததை எல்லாம் நான் அவர்களிடம் கூறினேன். காவல் துறை அதிகாரிகள் அதைப் பதிவு

செய்தனர். அதில் எனது இடது பெருவிரல் ரேகையைப் பதித்தேன். அது எனக்குக் காட்டப்பட்டது. 21.6.2007-ஆம் தேதியிட்ட புகாரை சாட்சிகளிடம் காட்டி, அதைக் குறித்து கேட்கப்பட்டபோது, சாட்சிகள் அதை ஒப்புக்கொண்டதன்பேரில் மேற்படி புகார் அ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்பட்டது..... அவள் புடவையின் தலைப்பை (முந்தானை) குழந்தையின் கழுத்தில் சுற்றிக் கொன்றதாக குற்றஞ்சாட்டப்பட்டவர் என்னிடம் கூறினாள். காவல் அதிகாரிகள் என்னிடம் விசாரித்தபோது நான் நடந்ததைக் கூறினேன்.

குறுக்கு விசாரணை: எனது பேத்தி இறந்த நாளன்று காலை 8.30 மணியளவில் காவல்துறை அதிகாரிகள் எங்கள் வீட்டிற்கு வந்தனர். காவல்துறை அதிகாரிகள் வந்து குழந்தை இறந்துவிட்டதை பார்த்தப் பின்னர், காவல்துறை அதிகாரிகள் என்னையும், எனது மருமகளான முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரையும், காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தனர். நான் முதல் விசாரணையில் சான்றுரைத்திருந்த விவரங்களையே காவல் நிலையத்திலும் சான்றுரைத்தேன். என் வீட்டுக்கு முன் எவரேனும் சத்தமாக அழைத்தால், அது எனது மகள் மும்தாஜின் வீட்டில் உள்ளவர்களுக்கு கேட்கும். எனது மகன் ஷம்சுதீன், அவரது மனைவி ஆஷா பேகம் இருவரும் வேறு தெருவில் உள்ள ஒரு வீட்டில் வசித்துவருகின்றனர். நான் இட்லி வாங்கி திரும்பி வந்தபோது, ஆஷா பேகமும் ஷம்சுதீனும் எனது மகள் மும்தாஜின் வீட்டில் இல்லை. .....நாங்கள் எங்களது பேத்தியை பள்ளியில் சேர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால், 20-ஆம் தேதியன்று காலை குற்றஞ்சாட்டப்பட்டவரின் தந்தை, எங்கள் பேத்தி பர்ஹானாவையும் எங்களது வீட்டில் விட்டுவிட்டு கொல்லக்குடி கிராமத்திற்கு

சென்றுவிட்டார் என்று சொல்லப்பட்டிருந்தால், அது சரியல்ல. நான் குழந்தை இறந்து கிடப்பதைப் பார்த்து, வீட்டைவிட்டு வெளியே வந்து கூச்சலிட்டபோது, சுமார் 10 அல்லது 15 அடி தூரத்திலிருந்து மும்தாஜும் ஆஷா பேகமும் வந்துகொண்டிருந்தனர். எனது வீட்டின் உரிமையாளர் மஜீத் ஆவார். நான் ஆஸ்பெஸ்டாஸ் தகடால் மூடப்பட்டிருக்கு தாழ்வாரத்தின் ஒரு பகுதியில் வசித்து வருகிறேன். அதற்கு ஒரே ஒரு கதவு உள்ளது. நான் வசித்த இடம் ஒரு தாழ்வாரமாக இருந்ததால், அங்கு சன்னல்கள் இல்லை. நான் இட்லியை வாங்கி திரும்பி வந்தபோது, வீட்டின் கதவு நன்கு மூடப்பட்டிருந்தது. நான் அதை பலமாக அடித்துத் திறந்தேன். மறுநாள் காலை 6.00 மணிக்கு நான் பால் சங்கத்திற்குச் சென்று பால் வாங்கி வந்தேன் என்று காவல் விசாரணையில் நான் சான்றளிக்கவில்லை என்று கூறினால், அது சரியல்ல. தேநீர் தயாரித்து எனது மருமகளுக்கு கொடுத்தப் பின்னர், முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரான எனது மருமகள் இட்லி வாங்குவதற்காக என்னிடம் ரூ.100/- கொடுத்தார் என்றும், நான் அதைக் கொண்டு இட்லி வாங்க விவசாய சந்தைக்குச் சென்றேன் என்றும், இட்லி வாங்கிவிட்டு நான் திரும்பி வரும்போது, அப்துல் ரஹீம் எனது மகள் மும்தாஜிடம் தொலைப்பேசியில் பேசியதாக அவள் கூறினாள் என்று நான் காவல்துறையின் விசாரணையில் சான்றுரைக்கவில்லை என்றால், அது சரியல்ல. நான் முதல் விசாரணையில் சான்றுரைத்ததுபோன்று, நான் திரும்பி வந்தபின்னர் எனது பேத்திக்காக வைக்கப்பட்ட தேநீர் அப்படியே இருந்தது, நான் அதைக் குறித்து குற்றஞ்சாட்டப்பட்டவரிடம், ஏன் பேத்தியை எழுப்பி தேநீர் கொடுக்கவில்லை என்று கேட்டபோது, அவள் அமைதியாக உட்கார்ந்திருந்தாள், நான் மீண்டும் அதைக் குறித்து

கேட்டபோது, அவள் குழந்தையைக் கொன்றுவிட்டதாகக் கூறினாள் என்று புகாரிலும் காவல்துறை விசாரணையிலும் நான் தெரிவிக்கவில்லை என்று கூறினால், அது சரியல்ல..... எனது மூத்த மகன் ஜமால் முகமது மற்றும் எனது மற்றொரு மகன் ஷம்சுதீன் மட்டுமே வெளிநாட்டிலிருந்து எனக்கு பணம் அனுப்பிக் கொண்டிருந்தனர். அப்துல் ரஹீம் திருமணத்திற்கு பிறகு என்னை கவனிக்கவில்லை என்றும், நான் அவன் மீது கோபமாக உள்ளேன் என்று கூறினால், அது சரியல்ல. எனது மகன் அப்துல் ரஹீமும், குற்றஞ்சாட்டப்பட்டவரும் என்னைக் கவனித்துக் கொள்ளவில்லை என்றும், அவர்கள் எனது பேத்தி பர்ஹானாவை என்னிடம் ஒப்படைத்துவிட்டனர் என்றும் கூறினால், அது சரியல்ல. கோபத்தின் காரணமாக, நானும் எனது மகள் மும்தாஜும் சேர்ந்து எனது பேத்தியை கொலை செய்தோம் என்று கூறினால், அது சரியல்ல. வெளிநாட்டிலிருந்து வந்த ஷமுதீன் பணம் கொடுத்து, தனது செல்வாக்கைப் பயன்படுத்தி என்னை வைத்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக ஒரு பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று கூறினால், அவை அனைத்தும் தவறானவை. குழந்தையின் இறப்பை கேள்விப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்டவர் கொல்லக்குடி கிராமத்திலிருந்து பெரம்பலூருக்கு மாலை 5.00 மணிக்கு வந்தபோது எங்கள் அனைவராலும் அவள் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டாள் என்று கூறினால், அது சரியல்ல.

5.2. அ.சா.1-ஆல் உறுதிப்படுத்தப்பட்டவாறு, சம்பவத்துடன் நெருங்கிய தொடர்புடைய அ.சா.1-இன் மகளான அ.சா.2, மும்தாஜின் சாட்சியம் பொருந்தக்கூடியதாகயிருக்கிறது. அவரது வாக்குமூலத்தின் தொடர்புடைய பகுதிகள் பின்வருமாறு: -

"……முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரின் மகளின் பெயர் பர்ஹானா ஆகும். அக்குழந்தை 2007 ஜூன் 21 அன்று இறந்துவிட்டது. இரண்டு நாட்களுக்கு முன்பு, குற்றஞ்சாட்டப்பட்டவரும் அவரது மகளும் பெரம்பலூரில் விருந்தினர்களாக தங்கியிருந்தனர். எனது வீட்டில் இருந்து சிறிது தொலைவிலுள்ள ஒரு வீட்டில் எனது தாய் தனியாக வசித்து வருகிறார். அந்த சமயத்தில், முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரும் அவரது மகளும் பெரம்பலூருக்கு வந்தபோது எனது தாயுடன் தங்கியிருந்தனர். குற்றஞ்சாட்டப்பட்டவரும் அவரது மகளும் எனது தாயின் வீட்டில் தனியாக வசித்து வந்தனர். சம்பவம் நடந்த அன்று காலை 7.30 மணிக்கும் 8.00 மணிக்கும் இடையே என் தாயார் இட்லி வாங்கச் சென்றுவிட்டார். எனது தாய் இட்லி வாங்கிக்கொண்டு வீட்டிற்குச் சென்றபோது அவர் கூச்சலிட்டார். மக்கள் அங்கு கூடினர். நாங்கள் அந்த இடத்திற்குச் சென்றோம். நான் குற்றஞ்சாட்டப்பட்டவரின் மகள் இறந்திருந்ததைக் கண்டேன்…… நான் முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரை கேட்டபோது, அவள் குழந்தையைக் கொன்றுவிட்டதாகக் கூறினாள். (சாட்சி இதையே மீண்டும் கூறினார்) அன்று காலை 7.00 மணியளவில் எனது இளைய சகோதரர் அப்துல் ரஹீம் என்னை தொலைபேசி மூலம் அழைத்து, "வஹிதா" அதாவது முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவர் எங்கும் செல்லக்கூடாது என்றும், குற்றஞ்சாட்டப்பட்டவரின் மகளை பள்ளியில் சேர்க்கவேண்டும் என்றும் கூறினார். எனது இளைய சகோதரர் அப்துல் ரஹீம், மகளை பெரம்பலூரில் உள்ள பள்ளியில் சேர்க்கவும், எனது தாயுடன் தங்கவும் குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் கூறும்படி என்னிடம் தொலைபேசியில் கூறினார். எனது தாய் இட்லி வாங்கிவிட்டு திரும்பியபோது, எனது தம்பி

அப்துல் ரஹீம் தொலைபேசியில் கூறிய விவரங்களை நான் அவளிடம் கூறினேன். முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரை அழைத்து வந்து, எனது வீட்டில் வைத்திருக்கும்படி எனது இளைய சகோதரர் தொலைபேசியில் என்னிடம் கூறினார், அதை நான் செய்வதற்கு முன் சம்பவம் நிகழ்ந்துவிட்டது. நான் பார்த்தபோது, பர்ஹானா மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் இரத்தம் வழிந்து இறந்து கிடந்தாள். காவல்துறை அதிகாரிகள் என்னை விசாரித்தபோது, நான் மேற்கண்ட விவரங்களைக் கூறினேன், அவ்வளவுதான்.

குறுக்கு விசாரணை: எனது தாயார் இட்லி வாங்கிவந்த, 5 நிமிடங்களுக்குள் கூச்சலிட்டார். அதற்குள்ளாக 20 அல்லது 30 பேர் அங்கு கூடிவிட்டனர். அதைத் தொடர்ந்து காலை 9.30-லிருந்து 9.45-க்குள்ளாக காவல் துறை அதிகாரிகள் அங்கு வந்தனர். நான் அங்கு சென்று குற்றஞ்சாட்டப்பட்டவரை பார்த்் கேட்டபோது, குற்றஞ்சாட்டப்பட்டவர் அமைதிகாத்தார், இதை நான் முதல் விசாரணையில் தெரிவித்திருந்தேன், அதை காவல் துறையினர் நடத்திய விசாரணையில் தெரிவிக்கவில்லை. நான் எனது முதல் விசாரணையில் சான்றுரைத்திருந்ததால், அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு அப்துல் ரஹீம் தொலைபேசியில் பேசியதையும், அந்த உரையாடலின் விவரங்கள் குறித்தும், அதை எனது தாயரிடம் தெரிவித்தது குறித்தும் காவல் துறை அதிகாரிகளின் விசாரணையில் நான் தெரிவிக்கவில்லை..... திருமணத்திற்குப் பிறகு குற்றம் சாட்டப்பட்டவருக்கும் அவரது கணவருக்கும் எனது தாயுடன் சுமூகமான உறவு இல்லை. இச்சூழ்நிலைகளில், அவரது மகளின் கல்விக்காக அவளை எனது தாயாரின் வீட்டில் விட்டுவிட்டு, 20-ம் தேதி

கொல்லக்குடி கிராமத்திற்குச் சென்றுவிட்டாள் எனக் கூறப்பட்டிருந்தால், அவை அனைத்தும் பொய்யானவையே. குழந்தையை விட்டுச் சென்று அதன் மரணத்திற்கு நானும் எனது தாயாரும்தான் காரணம் என்று கூறினால், அவையனைத்தும் பொய்யே."

5.3. அ.சா.1-இன் மற்றொரு மருமகளான அ.சா.3-ஆஷா பேகமும் அக்குறிப்பிட்ட சமயத்தில் சம்பவ இடத்திற்கு வந்தாகக் கூறப்படுகிறது. மேல்முறையீட்டாளர் ஏன் குழந்தையைக் கொன்றார் என்று அவர் கேட்டபோது, மேல்முறையீட்டாளர் பதிலளிக்கவில்லை. அவரது குறுக்கு விசாரணையின்போது, சம்பவம் நிகழ்வதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே மேல்முறையீட்டாளரிடம் அவர் பேசுவதில்லை என்று இந்தச் சாட்சி குறிப்பிட்டுள்ளார். அவரது வாக்குமூலத்தின் தொடர்புடைய பகுதிகள் பின்வருமாறு:-

".....முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பர்ஹானா என்ற பெயரில் ஒரு மகள் இருந்தாள். அவள் 21.6.2007 அன்று இறந்துவிட்டாள். சம்பவம் நடந்த நாளன்று, குற்றஞ்சாட்டப்பட்டவரும் அவரது மகளும் அ.சா.1-பஷீரா வசித்து வரும் வீட்டில் பஷீராவுடன் வசித்து வந்தனர். எனது மாமியார் இட்லி வாங்கி வந்த பின்னர், அவரது கூச்சலைக் கேட்டு, நானும் எனது மைத்துனி மும்தாஜும் எனது மாமியாரின் வீட்டிற் சென்றோம். எனது மாமியார் எனது வீட்டிலிருந்து 5 வீடுகள் தள்ளி வசித்துவருகிறார். நான் அங்கு சென்று பார்த்தபோது, குற்றஞ்சாட்டப்பட்டவரின் குழந்தை அசைவற்று இருந்தது. ஒரு செவிலியர் வந்து குழந்தையைப் பார்த்து, குழந்தை இறந்துவிட்டதை உறுதிப்படுத்தினார். என் மைத்துனி மும்தாஜ், குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பார்த்து, "நீங்கள் ஏன் இப்படி செய்தீர்கள்? என்று கேட்டாள். உங்களுக்கு அந்தக் குழந்தை பிடிக்கவில்லை

என்றால், நீங்கள் அவளை என்னிடம் விட்டுச் சென்றிருக்கலாம்" என்று தனது தலையில் அடித்துக்கொண்டே கூறினாள். நான் குற்றஞ்சாட்டப்பட்டவரை "நீங்கள் ஒரு படித்த பெண்ணா? நீங்கள் ஏன் குழந்தையைக் கொன்றீர்கள்?" என்று கேட்டு, அவளிடம் கத்தினேன். குற்றஞ்சாட்டப்பட்டவர் எதுவும் பேசவில்லை. காவல்துறை அதிகாரி என்னிடம் விசாரித்தபோது, நான் மேற்படி விவரங்களைக் கூறினேன். பர்ஹானாவின் மரணத்திற்கு யார் காரணம் என்று கேட்டால், அவளது தாயார் மட்டுமே காரணம். அவ்வளவுதான்.

குறுக்கு விசாரணை: முதல் விசாரணையில் நான் கூறியுள்ள சங்கதிகளையே காவல்துறை விசாரணையிலும் கூறியுள்ளேன். சம்பவம் நடந்த நாளன்று, எனது கணவர் அவரது விடுமுறையைக் கழிக்க வெளிநாட்டில் இருந்து வந்திருந்தார். நானும், முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரும் கடந்த நான்கு ஆண்டுகளாக ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதில்லை. பர்ஹானா இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது குழந்தையுடன் எங்களது வீட்டிற்கு வந்தாள். முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவர் வந்த பின்னர், அவள் எனது கணவரிடம் அவளது கணவர் அப்துல் ரஹீம் அவளுக்கு பணம் அனுப்புவதில்லை என்றும், அவர் தொலைபேசியில் தொடர்புகொள்வதுமில்லை என்றும், அவளது குழந்தை பர்ஹானாவை படிக்கவைக்க விரும்புவதாகவும் கூறினாள். இத்தனை ஆண்டுகளாக பேசாமல் இருந்துவிட்டு இப்போது இங்கு வந்திருக்கிறீர்கள் என்று எனது கணவர் முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பார்த்துக் கேட்டார். பின்னர், குற்றஞ்சாட்டப்பட்டவர் குழந்தையை அழைத்துக்கொண்டு எனது

மாமியார் வீட்டிற் சென்றாள். நான் காவல்துறை விசாரணையின்போது குழந்தையின் சடலத்தைப் பார்த்த பிறகு எனது மைத்துனி மும்தாஜ், குற்றஞ்சாட்டப்பட்டவரைக் குறித்து கேட்ட விவரங்களைக் கூறவில்லை. பர்ஹானாவின் மரணத்திற்கு குற்றஞ்சாட்டப்பட்டவர் காரணமல்ல என்றும், எனக்கும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்பில்லை என்பதால், நான் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றும் கூறினால், அது சரியல்ல. குற்றஞ்சாட்டப்பட்டவர் எங்களிடம் வராததால், எங்களுக்கும் அவருக்கும் இடையே தொடர்பி லை.

5.4. அ.சா.1-இன் வீட்டு உரிமையாளரான அ.சா.4-ஷர்புனிஷா, வீட்டிற்கு திரும்பிவந்துகொண்டிருந்தபோது, அவர் மேல்முறையீட்டாளரை குழந்தையுடன் பார்த்ததாகச் சான்றுரைத்தார். மேலும், மேல்முறையீட்டாளர் குழந்தையைக் கொன்றதை ஒப்புக்கொண்டதை தான் கேட்டதாகவும் அச்சாட்சி கூறியுள்ளார். அவரது வாக்குமூலத்தின் தொடர்புடைய பகுதிகள் பின்வருமாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளன:-

"...அ.சா.1-பஷீரா எங்கள் வீட்டின் ஒரு பகுதியில் வசித்து வருகிறார். சம்பவம் நடந்த சமயத்தில், முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவர் பஷீராவின் வீட்டிற்கு விருந்தினராக வந்தார். அப்போதுதான் எனக்கு அவரைப் பற்றி தெரியவந்தது. அதற்கு முன்பு, முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரை எனக்குத் தெரியாது. முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது குழந்தையுடன் பஷீராவின் வீட்டிற்கு வந்து அங்கேயே தங்கினார். 21.6.2007 அன்று குற்றஞ்சாட்டப்பட்டவரின் குழந்தை இறந்துவிட்டது. நான் எனது குழந்தையை பேருந்தில் பள்ளிக்கு அனுப்புவதற்காக பெரம்பலூர் உழவர் சந்தைக்கு அருகில் வந்துவிட்டு, எனது குழந்தையை

அனுப்பிய பிறகு வீட்டுக்குத் திரும்பினேன். குற்றஞ்சாட்டப்பட்டவர் அவரது குழந்தையைக் கொன்றுவிட்டதாக மக்கள் பேசிக் கொண்டிருந்தனர். நான் அந்தக் குழந்தையைப் பார்த்தபோது, முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவர் அங்கிருந்தார். தான் அணிந்திருந்த சேலையின் தலைப்பைக் (முந்தானை) கொண்டு குழந்தையின் கழுத்தைச் சுற்றி நெருக்கிக் கொன்றேன் என்று அவள் கூட்டத்தினரிடம் கூறினாள். அப்போது நான் அங்கு இருந்தேன். காவல்துறை அதிகாரிகள் என்னை விசாரித்தபோது மேற்கண்ட விவரங்களை நான் தெரிவித்தேன்.

குறுக்கு விசாரணை: பஷீரா கடந்த இரண்டு ஆண்டுகளாக ரூ.350/- மாத வாடகைக்கு எங்கள் வீட்டில் வாடகைதாரராக வசித்து வருகிறார். நான் எனது குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பச் சென்றுவிட்டு திரும்பி வந்தபோது எனது வீட்டில் கூட்டத்தைப் பார்த்தேன் என்று காவல்துறை விசாரணையில் நான் தெரிவிக்கவில்லை எனக் கூறுவது சரியல்ல. குற்றஞ்சாட்டப்பட்டவர் அவரது சேலையின் தலைப்பைக் (முந்தானை) கொண்டு குழந்தையின் கழுத்தை இறுக்கிக் கொன்றார் என்று அவர் கூட்டத்தில் சொன்னதை நான் காவல்துறை விசாரணையில் தெரிவிக்கவில்லை. குற்றஞ்சாட்டப்பட்டவரை எனக்குத் தெரியாது என்றும், அவரது குழந்தை இறந்த அன்று நான் குற்றஞ்சாட்டப்பட்டவரை பார்க்கவில்லை என்றும் கூறுவது சரியல்ல. பஷீரா எங்களது வாடகைதாரர் என்பதால், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று கூறுவது சரியல்ல. ”

5.5. அ.சா.1-இன் அண்டைவீட்டாரான அ.சா.5-திரு-ஜோதி, இறந்த குழந்தையின் உடலுக்கு அருகே மேல்முறையீட்டாளர் அமர்ந்திருந்தபோது, பத்து நிமிடங்கள்

மேல்முறையீட்டாளரைப் பார்த்து ளதாக சாட்சியமளித்தார். அவரது சான்றுரை பயனுள்ள வகையில் பின்வருமாறு: -

> "என் பெயர் ஜோதி. என் தந்தையின் பெயர் வீராசாமி. நான் பெரம்பலூரில் வசித்துவருகிறேன். சாட்சியான பஷீரா எங்கள் வீட்டிற்கு அடுத்துள்ள வீட்டில் வசித்து வருகிறார். சுமார் 4 அல்லது 5 மாதங்களுக்கு முன்பு, குழந்தை இறந்த நாளன்றுதான், நான் குற்றஞ்சாட்டப்பட்டவரை 10 நிமிடங்கள் பார்த்துள்ளேன். முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரின் குழந்தை அன்றைய நாள் இறந்துவிட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவரின் குழந்தை இறந்த நாளன்றுதான், சாட்சியான பஷீரா தங்கியிருந்த வீட்டில் குழந்தையின் சடலத்தின் அருகே முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவர் அமர்ந்திருந்தபோது, அவரை நான் பார்த்தேன். அப்போது காலை 8.00 அல்லது 8.15 மணி இருக்கும், குழந்தையைப் பெற்ற தாயே குழந்தையைக் கொன்றுவிட்டதாகக் கூறி அ.சா.1-பஷீரா அழுதுகொண்டிருந்தார். நான் அவரிடம் வேறொன்றும் செய்யாமல், காவல் நிலையத்திற்கு செல்லும்படி கூறினேன். காவல்துறை விசாரணையின்போது நான் இதைச் சொன்னேன்.
>
> **குறுக்கு விசாரணை**: காவல்துறை விசாரணையின்போது, முதல் விசாரணையில் நான் குறிப்பிட்டுள்ள விவரங்களைச் சான்றுரைக்கவில்லை என்று கூறுவது சரியல்ல. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்று கூறுவது சரியல்ல."

5.6. குறிப்பிடப்பட்டுள்ளவாறு, பாதிக்கப்பட்ட குழந்தையின் சடலக் கூறாய்வைப் பொறுத்தவரையில், அரசுத்தரப்பு இரு மருத்துவ அதிகாரிகளை விசாரித்தது, அவர்கள் சடலத்தின் மீதான மரணத்திற்கு காரணமான காயங்கள் குறித்து சாட்சியமளித்தனர். அ.சா.8-மருத்துவர் சரவணன், கழுத்தைச் சுற்றி 20 செ.மீ. நீளமும், 2 செ.மீ. அகலமும்

கொண்ட காயம் இருந்ததாகவும், நாவடிக் குருத்தெலும்பு உடைந்திருந்தது என்றும், அது கழுத்து நெரிக்கப்பட்டதுடன் ஒத்திருந்தது என்றும் சாட்சியமளித்தார். ஒரு சேலையின் முந்தானையை முறுக்கி, கழுத்தைச் சுற்றி இறுக்கினால், குழந்தைக்கு அத்தகைய காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் அவர் கருத்துரைத்தார். கழுத்தைச் சுற்றி சேலையால் இறுக்கினால், 2 செ.மீ-க்கு மேல் காயம் ஏற்படக்கூடும் என்று குறுக்கு விசாரணையின்போது அவர் சான்றுரைத்தார். இருப்பினும், சேலை சிறிய அளவில் முழுமையாக முறுக்கப்பட்டிருந்தால், 2 செ.மீ. அளவுக்கு குறைவான காயம் இருந்திருக்கக்கூடும் என்று அவர் மறுவிசாரணையில் தெளிவுப்படுத்தினார். அ.சா.13-மருத்துவர் எ. கார்த்திகேயன், நாவடிக் குருத்தெலும்பு குறித்து அறிக்கையளித்த மருத்துவராவார். அவரது பரிசோதனையின்படி, நாவடிக் குருத்தெலும்பின் முறிவானது மரணத்திற்கு முன்பு நிகழ்ந்துள்ளது, மேலும் அது, கழுத்து நெரிக்கப்பட்டதன் காரணமாக ஏற்படுவதற்கு வாய்ப்பிருந்தது என்பதாகும். இருப்பினும், சேலையால் கழுத்து நெரிக்கப்பட்டிருந்தால், அடையாளக்குறி இருப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கும் என்று குறுக்கு விசாரணையின்போது அவர் தெரிவித்துள்ளார். கழுத்து நெரிக்கப்பட்டதன் காரணமாக மூச்சுத்திணறல் ஏற்பட்டு குழந்தை மரணமுற்றது என்ற சங்கதி பிரச்சினைக்குரிய விடயமல்ல, எனவே, இந்தச் சான்றுரைகளை நாம் விரிவாகக் கூற வேண்டியதில்லை.

5.7. இவ்வழக்கில் தொடர்புடைய காவல்துறையினரைப் பொறுத்தவரையில், பெரம்பலூர் துணை ஆய்வாளரான அ.சா.10-சுப்புலட்சுமி, அ.சா.1-இன் வாக்குமூலத்தைப் பதிவு செய்து, மு.த.அ.-ஐ எழுதினார். அ.சா.1, புகாரைப் பதிவு செய்வதற்காக காலை சுமார் 9.00 மணியளவில் காவல் நிலையம் வந்ததாக அவர் சான்றுரைத்தார். குறுக்கு விசாரணையின்போது, அ.சா.1 தனது முதல் புகாரில், குழந்தை இறந்துவிட்டதை அறிந்தவுடன் வீட்டுக்கு வெளியே வந்து கூச்சலிட்டதாகக் கூறவில்லை என்றும், சம்பவம் நடந்த உடனே மேல்முறையீட்டாளரை காவல் நிலையத்திற்கு கொண்டுவரவில்லை

என்றும் அவர் தெளிவுப்படுத்தினார். அவர் காலை 8.00 மணிக்கு சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று சாட்சிகளையும் மேல்முறையீட்டாளரையும் தன்னுடன் காவல் நிலையத்திற்கு கொண்டுவந்தார் என்ற கருத்துகளை குறுக்கு விசாரணையில் அவர் மறுத்தார். அ.சா.10-இன் சான்றிலிருந்து தொடர்புடைய பகுதிகள் பின்வருமாறு: -

> "...21.6.2007 அன்று காலை 9.00 மணிக்கு நான் பணியில் இருந்தபோது, பெரம்பலூர், ரங்கா நகர், குறுக்குத்தெரு எண் 230/48டி-இல் வசிக்கின்ற 65 வயதுடைய முகமது காசிமின் மனைவியான பஷீரா காவல் நிலையத்திற்கு வந்து, புகார் அளித்தார், நான் அதை எழுத்து மூலம் பதிவு செய்துக்கொண்டேன். புகார் அளித்தப் பின்னர், அந்தப் புகாரை பஷீராவுக்கு நான் படித்துக்காண்பித்தேன். அவர் கூறியதுபோல், அது அவரால் சொல்லப்பட்டது, அவருக்கு கையெழுத்திட தெரியாது என்பதால் புகாரில் நான் அவரது இடதுகை பெருவிரல் ரேகையைப் பெற்றுக்கொண்டேன்.
>
> **குறுக்கு விசாரணை**: ....என்னிடம் அளிக்கப்பட்ட புகாரில், இந்தச் சம்பவத்துக்குப்பின், முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரை புகார்தாரரான பஷீரா பெரம்பலூர் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. பஷீரா புகாரளித்தபோது, அன்வர் பாஷா அவருடன் இருந்தார். குழந்தை இறந்ததைப் பார்த்தப் பின்னர், பஷீரா வீட்டைவிட்டு வெளியே வந்து கூச்சலிட்டார், அதன் பின்னர் சாட்சிகள் மும்தாஜ் மற்றும் ஆஷா பேகம் அங்கு வந்தனர் என்று சாட்சி பஷீரா புகார் மனுவில் தெரிவித்திருக்கவில்லை. பஷீரா, காலை 6.00 மணிக்கு பால் வாங்குவதற்கு சங்கத்திற்குச் சென்றதாகப் புகாரில் கூறியிருக்க-வில்லை. அவர் பால் வாங்கிக்கொண்டு வரும் வழியில் தனது மகள் மும்தாஜை அவரது வீட்டில் சந்தித்துப் பேசியதாக அவர் புகாரில்

கூறியிருக்கவில்லை. வீட்டுக்கு வந்த பிறகு, குற்றஞ்சாட்டப்பட்டவர், இட்லி வாங்குவதற்காக நூறு ரூபாய் கொடுத்ததாகவும், அதைப் பெற்றுக்கொண்டு இட்லி வாங்குவதற்காக உழவர் சந்தைக்குச் சென்றதாகவும் சாட்சி பஷீரா அவரது புகாரில் கூறியிருக்கவில்லை. அவர் வீட்டிற்கு வந்த பிறகு, வீட்டின் கதவு பூட்டப்பட்டிருந்ததாகவும், அவர் கதவைத் தட்டி திறந்ததாகவும் சாட்சி பஷீரா புகாரில் தெரிவித்திருக்கவில்லை. நான் சம்பவம் குறித்து அறிந்த பின்னரே, காலை 8.00 மணிக்கு சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று, சாட்சிகளான பஷீரா, மும்தாஜ் மற்றும் ஆஷா பேகம் ஆகியோரை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தேன் என்று கூறினால், அவை அனைத்தும் சரியல்ல. அந்த நேரத்தில், நான் முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரை மேற்சொன்ன சாட்சிகளுடன் அழைத்துச் சென்றேன் என்று கூறினால், அதுவும் சரியல்ல."

5.8. அ.சா.12-திரு. ஜி. அய்யனார் இவ்வழக்கின் முதல் புலனாய்வு அதிகாரியாவார். அவர் 21.6.2007 அன்று காலை 10.15 மணிக்கு மு.த.அ.-ஐ பெற்றுக்கொண்டு, விசாரணையைத் தொடங்கியதாகவும் கூறினார். இதற்காக, அவர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று, ஒரு சில சாட்சிகளை விசாரித்து, மகசர் தயாரித்து, பாய் மற்றும் தலையணை போன்ற பொருட்களை பறிமுதல் செய்தார். மேலும், பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் அவர் மேல்முறையீட்டாளரை கைது செய்ததாகவும், சாட்சிகளின் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் கூறினார். குற்றத்திற்கு பயன்படுத்தப்பட்ட சேலையைப் பறிமுதல் செய்ததாகவும் அவர் கூறினார். அவரது சாட்சியத்தின் தொடர்புடைய பகுதிகள் பின்வருமாறு:

".....அதேநாள் சுமார் 17.00 மணிக்கு பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட வஹிதாவை நான் கைது செய்தேன்.

நான் முக்கிய சாட்சிகளை விசாரித்து, அவரது ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகளான தேவராஜ் மற்றும் பரமேஸ்வரன் ஆகியோரின் முன்னிலையில் பதிவு செய்தேன். அவர் அணிந்திருந்த சேலையினால் குழந்தையின் கழுத்தை நெரித்துக் கொன்றதாக ஒப்புதல் வாக்குமூலத்தில் முதன்மைக் குற்றஞ்சாட்டப்பட்டவர் கூறினார். ஒப்புதல் வாக்குமூலத்தின் ஏற்புடைய பகுதி அ.சா.ஆ.9 ஏற்கெனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் வாக்குமூலத்தின்படி, அவர் அணிந்திருந்த சேலையை, மகசரில் குறிப்பிடப்பட்டுள்ள பெண் காவலரின் உதவியுடன் நான் பறிமுதல் செய்தேன். அதற்கான மகசர்தான் என்னிடம் காட்டப்பட்டதாகும். அது ஏற்கெனவே அ.சா.ஆ.8-ஆக குறியீடு செய்யப்பட்டிருந்தது. என்னிடம் காட்டப்பட்ட சேலை என்னால் கைப்பற்றப்பட்டதேயாகும். அது ஏற்கெனவே சா.பொ.3-ஆக குறியீடு செய்யப்பட்டிருந்தது.

குறுக்கு விசாரணை: துணை ஆய்வாளர் சுப்புலட்சுமி மூலம் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு மாற்று சேலை வழங்கப்பட்டது என அ.சா.8 மகசரில் குறிப்பிடப்பட்டிருந்தது. நான், அன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு குற்றஞ்சாட்டப்பட்டவரை கைது செய்து பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்திலேயே மாலை 6.45 மணி வரை வைத்திருந்தேன். துணை ஆய்வாளர் சுப்புலட்சுமி மாற்று சேலை கொண்டுவருவதற்கு அனுப்பிவைக்கப்பட்டார் என ஒப்புதல் வாக்குமூலத்தின் கடைசிப் பகுதியில் குறிப்பிடப்படவில்லை. ஒரு பெண் காவலர் அனுப்பப்பட்டு, மாற்று சேலை கொண்டுவரப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.... பெரம்பலூரில் வெளியாகும் மாலை செய்தித்தாள்கள் மாலை 5.00 மணிக்கு வந்துவிடும். அன்றைய தினம், 21.6.2007 அன்று மாலை 5.00

மணிக்கு வெளியான மாலைமலர் செய்தித்தாளில், வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது என்று கூறப்பட்டால், அதுபற்றி எனக்குத் தெரியாது. நான் அவ்வாறான செய்தியை அளிக்கவில்லை. காவல்துறை அதிகாரிகள் சாட்சி பஷீராவை விசாரித்துவருகின்றனர் என்றும் அதே நாளிதழ் செய்தி குறிப்பிடுகிறது என்று கூறப்பட்டிருந்தால், அதுகுறித்து எனக்குத் தெரியாது. சம்பவம் நடந்த பின்னர், முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவர் வீட்டிலிருந்து தப்பி ஓடிவிட்டார் என்று சாட்சிகளான பஷீராவும் மும்தாஜும் சான்றுரைத்திருந்தனர். தினகரன் மற்றும் தினமலர் செய்தித்தாள்களில் வெளியான செய்திகளில், சம்பவம் நடந்து முடிந்த பின்னர் குழந்தையின் தாய், குழந்தையின் அருகில் படுத்துக்கொண்டிருந்தார் என்று குறிப்பிடப்பட்டிருந்தால், அதுகுறித்து எனக்கு தெரியாது. குழந்தையின் மரணத்திற்குப் பிறகு முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவர் வீட்டைவிட்டு ஓடிவிட்டார் என்றும், முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்த குழந்தையின் அருகில் படுத்துக்கொண்டிருந்தார் என்ற பொய்யான செய்தியை நாங்கள் வெளியிட்டோம் என்றும் கூறுவது சரியல்ல. எனது விசாரணையின்போது பஷீரா, மும்தாஜ், ஆஷா பேகம் ஆகியோர் குழந்தை இறந்திருப்பதைக் கண்டதாகச் சான்றுரைத்திருந்தனர் என்பது சரியல்ல. 20.6.2007 அன்று முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது பெண் குழந்தையை சாட்சி பஷீராவிடம் விட்டுவிட்டு அவர் அன்றே கொல்லக்குடி கிராமத்திற்குச் சென்றுவிட்டார் என்று கூறுவது சரியல்ல. 21.6.2007 அன்று கொல்லக்குடி கிராமத்தில் இருந்த குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அவரது குழந்தை இறந்துவிட்டது என்ற

தகவல் கிடைத்ததன்பேரில், அவர் பேருந்து மூலம் பெரம்பலூருக்கு வந்ததாகவும், அவர் இறங்கியபோது நான் அவரை கைது செய்தேன் என்று கூறுவதும் சரியல்ல....''

5.9. மற்றொரு காவல்துறை அலுவலரான அ.சா.14-டி. சிவசுப்பிரமணியன், விசாரணையின் பிற்பகுதியை மேற்கொண்டு, மற்ற சாட்சிகளின் வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர் குற்ற அறிக்கையைத் தாக்கல் செய்தார். தற்போதைய நோக்கத்திற்காக, விசாரணையின் ஒரு பகுதியாக உள்ள புகைப்படக் கலைஞர் மற்றும் சான்றொப்பமிட்ட சாட்சிகள் உட்பட மற்ற சான்றுரைஞர்களின் சாட்சியத்தை நாங்கள் விளக்கத் தேவையில்லை.

5.10. இருப்பினும், தற்போதைய வழக்கில், மேல்முறையீட்டாளரின் தந்தை அ.சா.6-ஜமால் முகமதின் சாட்சியம் பொருந்தக்கூடியதாகும், மிகக்குறிப்பாக, அவர் அரசுத்தரப்பு வாதுரைக்கு ஆதரவளிக்காமல், 20.6.2007 அன்று அ.சா-1-யிடம் குழந்தையை விட்டுச் சென்றதாகவும், குற்றஞ்சாட்டப்பட்டவரை தன்னுடன் கொல்லக்குடி கிராமத்திற்குக் கூட்டிச்சென்றதாகவும், மறுநாள் குழந்தையின் இறப்பை கேள்விப்பட்டு மேல்முறையீட்டாளருடன் பெரம்பலூருக்கு வந்தபோது, மேல்முறையீட்டாளரை பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்தனர் என்றும் உறுதிபடக் கூறியதன்மூலம், மேல்முறையீட்டாளரால் முன்வைக்கப்பட்டவாறான வேற்றிடவாதத்திற்கு ஆதரவளித்தார். இந்தச் சாட்சி பிறழ் சாட்சியாகக் கருதப்பட்டு, அவரை குறுக்கு விசாரணை செய்யும்படி அரசுத்தரப்புக்கு அனுமதி வழங்கப்பட்டது. உண்மையில், அவர் எதிர்த்தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. இந்தச் சாட்சியின் வாக்குமூலத்தின் தொடர்புடைய பகுதிகள் பின்வருமாறு: -

''.....16.06.2007 அன்று வெளிநாட்டிலிருந்து வந்த ஷம்சுதீனை நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அவர் திங்கட்கிழமை வருமாறு என்னைக் கேட்டுக்கொண்டார். 18-ஆம் தேதியன்று நான் என் மகளான

முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரையும், எனது பேத்தி பர்ஹானாவையும் ஷம்சுதீனின் வீட்டிற்கு அழைத்துச் சென்றேன். அந்தக் குழந்தையை படிப்புக்காக பெரம்பலூரில் விட்டுவிட்டு, அவள் அவர்களின் பாதுகாப்பில் இருந்தால், அப்துல் ரஹீம் பணம் அனுப்புவார் என்று நான் ஷம்சுதீனிடம் பேசினேன். இதனை தனது தாயிடம் கூறும்படி ஷம்சுதீன் என்னைக் கேட்டுக்கொண்டார். நான் அங்கு சென்று அதைச் சொன்னேன். இதனை அவர் அவரது மகள் மும்தாஜிடமும் கூறுமாறு என்னை கேட்டுக்கொண்டார். இந்தமுறையிலேயே, நான் மூன்று நாட்களாக சொல்லிக்கொண்டிருந்தேன். அவர்கள் சரியாக பதில் அளிக்கவில்லை. நான் கிராமத்திற்குப் புறப்படுகையில், எனது மருமகனின் தாய், தனது பேத்தி பர்ஹானாவை விட்டுவிட்டு, எனது மகளை என்னுடன் கூட்டிச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார். 20-ம் தேதி புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு நான் எனது மகளை மட்டும் அழைத்துக்கொண்டு கொல்லக்குடி கிராமத்திற்குச் சென்றேன். மறுநாள் காலை குழந்தை பர்ஹானா இறந்துவிட்டதாக தொலைபேசி மூலம் எங்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. நாங்கள் பெரம்பலூர் வந்தோம். அவர்கள் எனது மகளை கைது செய்தனர். எனது மருமகன் அப்துல் ரஹீம் போதுமான பணம் அனுப்புவதில்லை. இச்சூழ்நிலைகளில், இந்தச் சாட்சி அரசுத் தரப்பால் பிறழ்சாட்சியாகக் கருதப்பட்டு, குறுக்கு விசாரணை நடத்துவதற்கான அனுமதி கோரப்பட்டது. குறுக்கு விசாரணை நடத்துவதற்கான அனுமதி அளிக்கப்பட்டது.

அரசுத்தரப்பிலான குறுக்கு விசாரணை: அப்துல் ரஹீம் பணத்தை சரிவர அனுப்பி குடும்பத்தை நிருவகிக்கவில்லை என்பதால், நாங்கள் அவரது குழந்தையை பெரம்பலூரில் விட்டுவிட்டோம். எங்களை

பெரம்பலூருக்குச் செல்லுமாறு எவரும் கூறவில்லை. நாங்களே குடும்பத்தின் மூத்த மகனான ஷம்சுதீனிடம் சென்றோம். பெரம்பலூரில் யாரும் பதில் சொல்லாததால், குழந்தையை மீண்டும் கொல்லக்குடிக்கு அழைத்துச் செல்ல நாங்கள் முயற்சி செய்யவில்லை. எனது மருமகனின் தாய், குழந்தையை விட்டுவிட்டுச் செல்லுமாறு கேட்டுக்கொண்டதன்பேரில், நாங்கள் குழந்தையை விட்டுவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டோம். இதற்கு முன்பு நான் வெளிநாட்டில் பணியாற்றி வந்தேன். தற்போது நான் கோழிக் கடைகளை நடத்தி வருகிறேன். முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரான எனது மகள் தனது மாமியார் வீட்டிற்கும், மருத்துவமனைக்கும் செல்லப்போவதாக என்னிடம் கூறிக்கொண்டேயிருப்பாள், அவள் தவறான வழியில் செல்வதாக நான் காவல்துறை விசாரணையின்போது சான்றுரைத்துள்ளேன் என்று சொல்லப்பட்டால், அது சரியல்ல. காவல்துறை அதிகாரிகள் என்னை விசாரிக்கவில்லை. முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவர் எனது வீட்டில் சரியாக தங்கவில்லை என்றும், குற்றஞ்சாட்டப்பட்டவரின் நடத்தை சரியில்லை என்றும், அது தெரியவந்தால் எனது குடும்பத்தின் கவுரவத்தைப் பாதிக்கும் என்பதால் நான் அதை வெளிப்படுத்தவில்லை என்றும் கூறப்பட்டால், அவை அனைத்தும் தவறு. அனைத்து விவரங்களையும் அறிந்துகொண்ட எனது மருமகன், என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரையும், அவரது குழந்தையையும் சாட்சி பஷீராவின் வீட்டில் விட்டுச்செல்லுமாறு கூறினார் என்று நான் காவல்துறை விசாரணையின்போது சான்றுரைத்துள்ளேன் என்று

கூறப்பட்டிருந்தால், அவை அனைத்தும் சரியல்ல. அதன்பின்னர், நான் முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவரையும் அவரது குழந்தையையும் அழைத்துச் சென்று சாட்சி பஷீராவின் வீட்டில் விட்டுவிட்டேன் என்று காவல்துறை விசாரணையின்போது சான்றுரைத்துள்ளேன் என்று கூறப்படுவது சரியல்ல. நான் அவர்களை பெரம்பலூரில் விட்டுவிட்டு புறப்படும்போது, குற்றஞ்சாட்டப்பட்டவர் என்னிடம் என்னால் பெரம்பலூரில் தங்க முடியாது என்றும், அவள் விரைவில் என்னிடம் வந்துவிடுவேன் என்றும் கூறியதற்கு, குற்றஞ்சாட்டப்பட்டவரின் கணவர் சொன்னதுபோல செய்யுமாறு அறிவுறுத்தி, அங்கிருந்து சென்றுவிட்டேன் என்று காவல்துறை விசாரணையில் நான் சான்றுரைத்துள்ளேன் என்று கூறப்பட்டிருந்தால், அவை அனைத்தும் சரியல்ல. மறுநாள், எனது மகளான முதன்மை குற்றஞ்சாட்டப்பட்டவர் எனது பேத்தி பர்ஹானாவை கொன்றுவிட்டதாக தொலைபேசி மூலம் அறிந்துகொண்ட நான், அதன்பிறகு பெரம்பலூருக்கு வந்து இறந்துவிட்ட எனது பேத்தியைப் பார்த்ததாகவும், குற்றஞ்சாட்டப்பட்டவர் அங்கிருந்து ஓடிவிட்டதாகவும் காவல்துறையின் விசாரணையில் சான்றுரைத்துள்ளேன் என்று கூறப்பட்டிருந்தால், அவை அனைத்தும் தவறானவை. குற்றஞ்சாட்டப்பட்டவர், பெரம்பலூரில் தன்விருப்பப்படி நடந்துகொள்ளமுடியாததால், தனது குழந்தையைக் கொன்றுவிட்டதாக நான் காவல் துறை விசாரணையின்போது சான்றுரைத்துள்ளேன் என்று கூறினால், அது சரியல்ல. குற்றஞ்சாட்டப்பட்டவர் எனது மகள் என்பதால், நான் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்று கூறுவது சரியல்ல."

5.11. 1973[5]-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 313-இன் கீழான விசாரணையில் மேல்முறையீட்டாளர் அவருக்கு எதிராக அளிக்கப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளும் பொய்யானவை என்று மறுத்துரைத்தார்.

6. மேற்சொன்ன ஆவணங்களுடன், விசாரணை நீதிமன்றம், தரப்பினர்களின் வாதங்களைக் கேட்டு, 15.10.2009 தேதியிட்ட அதன் தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலம் வழக்கை மேல்நடத்த முடிவுசெய்தது.

6.1. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் தொடர்புடைய சாட்சிகளாக இருந்தபோதிலும், அ.சா.4 மற்றும் அ.சா.-5 ஆகியோர் தனிப்பட்ட சாட்சிகளாவர், அவர்கள் குழந்தையையும் குற்றஞ்சாட்டப்பட்டவர்-மேல்முறையீட்டாளரையும் ஒன்றாகப் பார்த்துள்ளனர் என்றும், அவர்கள் மேல்முறையீட்டாளருக்கு எதிராக சாட்சியளிப்பதற்கு எந்த அவசியமுமில்லை என்றும் விசாரணை நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. அ.சா.1-இன் வயது முதிர்வு மற்றும் பிற காரணிகளால், அவரால் குறிப்பிட்ட சில விடயங்களை நினைவில் வைத்துகொள்ளமுடியவில்லை என்பதன்பேரில் அவரது சாட்சியத்திலுள்ள சிறு முரண்பாடுகளின் காரணமாக அதை நிராகரிக்கமுடியாது என்று விசாரணை நீதிமன்றம் முடிவுசெய்தது. மேல்முறையீட்டாளர், பேருந்து நிலையத்தில் கைது செய்யப்பட்டார் என்பதை ஒப்புக்கொண்டவரான அ.சா.6-பிறழ்சாட்சியின் வாக்குமூலத்தைக் குறிப்பிட்டு, விசாரணை நீதிமன்றம், இரண்டு தனிப்பட்ட சாட்சிகள், மேல்முறையீட்டாளரை சம்பவம் நடந்த இடத்தில் பார்த்துள்ளதால், அவர் வேற்றிட வாதத்தை மெய்ப்பிக்கும் பொறுப்பை நிறைவேற்றவில்லை என்று தீர்மானித்தது. மேலும் வாய்மொழி சான்று, மருத்துவ முடிவுகளின்படி தீர்மானிக்கப்படும் மரணத்திற்கான காரணத்துடன் ஒத்துப்போகிறது என்று விசாரணை நீதிமன்றம் தீர்மானித்தது.

---

5. சுருக்கமாக 'கு.ந.ச.'

6.2. அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகளால் நிரூபிக்கப்பட்டபடி, மேல்முறையீட்டாளர், பலியான குழந்தையுடன் கடைசியாகக் காணப்பட்டார் என்று அறிந்த பின்னர், விசாரணை நீதிமன்றம், தொடர் சூழ்நிலைகளை நிரூபிக்கின்ற நம்பத்தக்க சான்றின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறியதுடன், மேல்முறையீட்டாளரே பலியான குழந்தையைக் கொன்ற குற்றம் புரிந்துள்ளார் என்று அரசுத்தரப்பு சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கும் பொறுப்பை நிறைவேற்றியுள்ளது என்று தீர்மானித்தது. விசாரணை நீதிமன்றம் அதன் தீர்முடிவினைப் பின்வருமாறு சுருங்கக்கூறியது: -

> "38. எங்கள் முன்பான வழக்கிலுங்கூட குற்றஞ்சாட்டப்பட்டவர் தேவைக்கு அதிகமான பணத்துடன் வசதியாக தனிப்பட்ட வாழ்க்கையை நடத்திவந்தார், அவரது குழந்தையின் கல்விக்காக அ.சா.1-உடன் இருக்க அவர் விரும்பவில்லை, அவருக்கு பிறந்துள்ள குழந்தையைப் பொருட்படுத்தாமலும், குழந்தைக்கு மரணம் விளைவிக்கும் நோக்கத்துடனும், அவரது செயல் குழந்தைக்கு மரணத்தை ஏற்படுத்தும் என்று முழுமையாக அறிந்திருந்தும், 21.6.2007 அன்று காலை 8.00 மணிக்கு அ.சா.1-இன் வீட்டில், அ.சா.1 வீட்டில் இல்லாதபோது, அவரது புடவையின் தலைப்பை முறுக்கி தூங்கிக்கொண்டிருந்த அவரது 6 வயதுடைய மகளான பர்ஹானாவின் கழுத்தைச் சுற்றி இறுக்கினார், நாவடிக் குறுத்தெலும்பு முறிந்ததன் காரணமாக மரணம் ஏற்பட்டது. இக்குற்றத்தை நிரூபிக்கும்பொருட்டு, அரசுத்தரப்பு வாய்மொழி சான்றினையும், ஆவணச் சான்றினையும் நம்பத்தக்கவகையில் கோர்வையாக வைத்துள்ளது."

6.3. அதற்கேற்ப, விசாரணை நீதிமன்றம், இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 302-இன் கீழான குற்றத்திற்காக மேல்முறையீட்டாளரை குற்றவாளி எனத் தீர்மானித்து தண்டனைத் தீர்வளித்தது.

7. மேல்முறையீட்டாளர், குற்றவியல் மேல்முறையீடு எண் 1/2010-இல் விசாரணை நீதிமன்றத்தின் தீர்முடிவை மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் எதிர்த்துரைத்தார், அது 9.3.2010-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது.

7.1 அ.சா.1-இன் வாக்குமூலங்களில் சில முரண்பாடுகள் இருந்தன என்ற பணிந்துரைகளை ஏற்றுக்கொள்கையில், சம்பவம் நிகழ்ந்த சமயத்தில் குழந்தை மேல்முறையீட்டாளரின் பொறுப்பில் விடப்பட்டதா? என்பதே பரிசீலினைக்குரிய ஒரே வாதக்கூறாகும் என்று உயர் நீதிமன்றம் தீர்மானித்ததுடன், பதிவிலுள்ள சான்றினை விரிவாகப் பரிசீலித்ததன்பேரில், மரணமுற்ற குழந்தையுடன் மேல்முறையீட்டாளரே கடைசியாகக் காணப்பட்டார் என்ற விசாரணை நீதிமன்றத்தின் காண்முடிவுகளை உறுதிசெய்தது. எனவே, மரணம் எவ்வாறு ஏற்பட்டது என்பதை விளக்கும் பொறுப்பு மேல்முறையீட்டாளர் மீது உள்ளது என்று உயர் நீதிமன்றம் கருத்துரைத்தது. வேற்றிட வாதம் குறித்து விவாதிக்கையில், அ.சா.4-ம், அ.சா.5-ம் தனிப்பட்ட சாட்சிகளாக இருப்பதால், அவர்களது வாதம் நிலைக்கத்தக்கதல்ல என்றும், 21.6.2007 அன்று சம்பவம் நிகழ்ந்த இடத்தில் மேல்முறையீட்டாளர் இருந்தார் என்று இருவரும் சாட்சியளித்தனர் என்றும், மரணமுற்ற குழந்தையுடன் அவர் காணப்பட்ட நாளன்றே அவர் கைது செய்யப்பட்டார் என்றும், சம்பவம் நிகழ்ந்த சமயத்தில் குழந்தையுடன் இருந்த ஒரே நபர் அவர்தான் என்றும் உயர் நீதிமன்றம் தீர்மானித்தது. உயர் நீதிமன்றம், மற்றவற்றிற்கிடையே பின்வருமாறு கருத்துரைத்து தீர்மானித்தது: -

"13. அ.சா.1-இன் கூற்றுப்படி, அவர் வீட்டுக்கு திரும்பியபோது, குற்றஞ்சாட்டப்பட்டவர் குழந்தையின் கழுத்தை

நெரித்துக்கொண்டிருந்ததைக் கண்டதாகவும், அது, வாக்குமூலம் 161-இல் இல்லை என்பதையும் தற்போது கற்றறிந்த வழக்குரைஞர் இந்நீதிமன்றத்தின் பார்வைக்குக் கொண்டுவந்துள்ளார். அ.சா.ஆ.1 அறிக்கையை அவர் அளித்தபோது, அவர், குற்றஞ்சாட்டப்பட்டவர்/மேல்முறையீட்டாளர் குழந்தையின் கழுத்தை நெரிக்கிக்கொண்டிருந்ததைக் உண்மையில் கண்டதாகத் தெரிவித்துள்ளார், அது வாக்குமூலம் 161-இல் இல்லை என்பது உண்மையே. இருப்பினும், இத்தருணத்தில் பரிசீலனைக்காக எழுகின்ற ஒரே வாதக்கூறு யாதெனில், குழந்தையை தாயார்/மேல்முறையீட்டாளரின் பாதுகாப்பில் அ.சா.1 விட்டுச்சென்ற சமயத்தில், அ.சா.1 திரும்பி வந்தபோது, அவர் குழந்தையின் சடலத்தை மட்டும்தான் கண்டார் என்பதாகும். சம்பவம் நடந்தபோது, குழந்தையுடன் மேல்முறையீட்டாளர் மட்டுமே இருந்தார். எனவே, மரணம் எவ்வாறு நிகழ்ந்தது என்பதை குற்றஞ்சாட்டப்பட்டவர்தான் விளக்க வேண்டியுள்ளது. இந்த வழக்கில், கழுத்து நெரிக்கப்பட்டதன் காரணமாக குழந்தைக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு இறந்துவிட்டது என்பதை அரசுத்தரப்பு நிரூபித்துள்ளது. அப்படியானால், மரணம் எவ்வாறு ஏற்பட்டது என்பதை தாயார்/மேல்முறையீட்டாளர் விளக்கவேண்டியுள்ளது.''

''14. விசாரணை நீதிமன்றத்திலும், அதேபோன்று இங்கும் முன்வைக்கப்பட்ட எதிர்வாதம் யாதெனில், தொடர்புடைய சமயத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர் அங்கு இல்லை என்றும், குழந்தையை அ.சா.1 உடன் விட்டுவிட்டு அவர் அங்கிருந்து சென்றுவிட்டார் என்பதாகும். நீதிமன்றத்தால் ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களால் இதை

ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இது ஒரு பொய்யான வாதமாகும். முதலாவதாக, அ.சா.4 மற்றும் 5 தனிப்பட்ட சாட்சிகளாவர், அவர்கள் அண்டை வீட்டுக்காரர்கள். அ.சா.4 மற்றும் 5-இன் சாட்சியத்தின்படி, 2007-ஆம் ஆண்டு ஜூன் 21-ஆம் தேதி காலை சம்பவம் நிகழ்ந்த இடத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர் இருந்தார் என்பதாகும். இரண்டாவதாக, காவல் துறையின் கூற்றுப்படி, அன்றைய தினமே அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார் என்பதாகும். இந்தச் சம்பவம் காலை 8.00 மணிக்கு நடந்துவிட்டபோது, வழக்கு காலை 9.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டு, முதல் தகவல் அறிக்கையானது, அன்றைய நாளே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மூன்றாவதாக, சம்பவம் நிகழ்ந்த இடத்திலும், அந்நேரத்திலும் குற்றஞ்சாட்டப்பட்டவர் மட்டுமே குழந்தையுடன் இருந்தார், இந்தச் சம்பவம் எவ்வாறு நடந்தது என்பதைக் குறித்து குற்றஞ்சாட்டப்பட்டவரே விளக்கவேண்டும். ஆனால், அவர் அதற்கு விளக்கம் அளிக்கவில்லை. இத்தகைய சூழ்நிலைகளில், குற்றஞ்சாட்டப்பட்டவரைத் தவிர வேறு எவரும் குழந்தையைக் கொலை செய்திருக்கமுடியாது என்பதை அரசுத்தரப்பு இவ்வழக்கில் நிரூபித்துள்ளது என்பது மிகத் தெளிவாகிறது."

7.2. மேற்சொன்ன அம்சங்களையும், அனைத்து காரணிகளையும் கருத்திற்கொண்டு பார்க்கையில், உயர் நீதிமன்றம், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையை உறுதி செய்து, மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்தது.

8. மேற்படி தீர்ப்புரை மற்றும் உத்தரவை எதிர்த்து, மிகக்குறிப்பாக, அரசுத்தரப்பு வழக்கில் தெரிகின்ற பல முரண்பாடுகள் தொடர்பான கேள்விக்குள்ளான காண்முடிவுகளை எதிர்த்து, மேல்முறையீட்டாளரின் கணவருக்கும், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்களுக்கும் இடையேயான இணக்கமற்ற உறவின் காரணமாக, அவர்கள்

மேல்முறையீட்டாளருக்கு எதிராக சான்றுரைப்பதில் ஆர்வம் கொண்டிருந்திருக்கலாம் என்பது குறித்தும், குறிப்பாக, அ.சா.6-ஜமால் முகமதின் சான்றுரையைப் பொறுத்து மேல்முறையீட்டாளரால் முன்வைக்கப்பட்ட வேற்றிட வாதம் குறித்தும், மேல்முறையீட்டாளருக்கு தனது சொந்த குழந்தையைக் கொல்வதற்கான உள்நோக்கம் இருக்கமுடியாது என்னும் சங்கதிகளைக் குறித்தும் மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் பல்வேறு பணிந்துரைகளை முன்வைத்துள்ளார்.

8.1. கற்றறிந்த வழக்குரைஞர், புகாரின் பொருளடக்கத்தைக் குறிப்பிட்டு, அ.சா.1-பஷீராவின் புகாரிலும், அவரது வாக்குமூலத்திலும் உள்ள பல்வேறு முரண்பாடுகளை, குறிப்பாக, அவர் பணம் எடுக்காமல் இட்லி வாங்குவதற்காக வீட்டிலிருந்து சென்றதாக புகாரில் தெரிவித்துள்ளதாகவும், ஆனால், சான்றுரையில் அவர் இட்லி வாங்குவதற்கு மேல்முறையீட்டாளர் ரூ.100 கொடுத்ததாகத் தெரிவித்துள்ளதாகவும் சொல்லப்படுவதாகக் கூறியுள்ளார்; அ.சா.1 அவரது புகாரில் சம்பவம் நடந்த இடத்திலிருந்து மேல்முறையீட்டாளர் ஓடிவிட்டதாக சாட்சியமளித்திருந்தார், ஆனால் அவரது சான்றுரையில், அவர் மேல்முறையீட்டாளரை காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்றதாகக் கூறியிருந்தார். அ.சா.1 என்ன பார்த்தார் என்பதற்கும், வீட்டி சென்ற பின்னர் என்ன செய்தார் என்பதிலும் பல்வேறு முரண்பாடுகள் உள்ளன, அவையாவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

8.2. மேல்முறையீட்டாளர் தனது புடவையை முறுக்கி, அதைக் குழந்தையின் கழுத்தைச் சுற்றி இறுக்கி நெரித்துக் கொன்றார் என்ற சாட்சிகளின் வாக்குமூலங்களிலுள்ள விடுபாடுகளை கற்றறிந்த வழக்குரைஞர் குறிப்பிட்டு, அவர்களது கூற்றுகள் சடலக்கூறாய்வு விசாரணையுடன் ஒத்துப்போகவில்லை என்று பணிந்துரைத்துள்ளார்.

8.3. மேல்முறையீட்டாளர், பேருந்து நிலையத்தில் கைது செய்யப்பட்டார் என்ற வாதத்தைப் பொறுத்தவரையில் அதற்கான அறுதி சான்றேதுமில்லை என்றும் மேல்முறையீட்டாளர் குழந்தையின் மரணம் குறித்த தகவலைப் பெற்றப் பின்னர் அவருடன் பெரம்பலூருக்கு திரும்பியபோதுதான் அவர் பேருந்து நிலையத்தில் கைது செய்யப்பட்டார் என்ற அ.சா.6-ஜமால் முகமதின் சாட்சியம் மீது சார்வுறப்பட்டது என்றும் கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்துள்ளார். மேலும், அ.சா.6-இன் வாக்குமூலத்தைப் பொறுத்தவரையில், மேல்முறையீட்டாளரால் முன்வைக்கப்பட்ட வேற்றிட வாதமானது ஆவணத்தின் அடிப்படையில் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், பொருண்மைகளின் பின்புலன்களைப் பார்க்கையில், மிகக் குறிப்பாக, மேல்முறையீட்டாளருக்கும், அவரது மாமியார் மற்றும் அவரது கணவரின் மற்ற உறவினர்களுக்கும் இடையேயான இணக்கமற்ற உறவு, அ.சா.6-ம், மேல்முறையீட்டாளரும், குழந்தையை அ.சா.1 மற்றும் அவரது உறவினர்களிடம் விட்டுவிட்டனர் என்ற அவரது சாட்சியத்தையும், வேற்றிட வாதத்தையும் புறக்கணிக்கமுடியாது என்று கற்றறிந்த வழக்குரைஞர் வாதுரைத்துள்ளார்.

8.4. மேல்முறையீட்டாளரின் கணவர் இந்தியாவுக்கு குறைந்த நாள் விடுமுறைக்கு வரும்போது தங்கும் வீடான மேல்முறையீட்டாளரின் புகுந்த வீட்டில்தான் அவர் திருமணம் முடிந்தவுடன் தனியாகவே வாழ்ந்துவந்தார் என்பதால், மேல்முறையீட்டாளர் ஆடம்பரமாக வாழ விரும்பியதன் காரணமாக குழந்தையைக் கொன்றார் என்று அரசுத்தரப்பால் முன்வைக்கப்பட்ட உட்கருத்து அடிப்படையற்றது என்று கற்றறிந்த வழக்குரைஞர் வாதுரைத்தார். இது தொடர்பாக, அரசுத்தரப்பு, அவரது நடத்தையைக் குறித்து மேல்முறையீட்டாளரின் கணவரிடம் ஒருபோதும் விசாரித்திருக்கவில்லை என்பதால் உட்கருத்துள்ளதெனக் கூறப்படுவதற்கு எந்த அடிப்படையும் இல்லை என்றும் கற்றறிந்த வழக்குரைஞர் வாதுரைத்தார். மேல்முறையீட்டாளரின் கணவருக்கும், அ.சா.1-க்கும் இடையே இணக்கமற்ற உறவு

இருந்துவந்தது என்ற ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியைக் கருத்திற்கொண்டு பார்க்கையில், அவரது மகனான மேல்முறையீட்டாளரின் கணவரிடமிருந்து அ.சா.1 பண உதவியை பெற்றுக்கொள்ளலாம் என்பதற்காக மேல்முறையீட்டாளரை பொய்யாகப் பிணைப்பதற்கான வாய்ப்புள்ளதால், அதைப் புறந்தள்ளிவிடமுடியாது என்றும் பணிந்துரைத்துள்ளார்.

8.5. இதற்கு மாறாக கற்றறிந்த வழக்குரைஞர், தரப்பினர்களுக்கிடையே இணக்கமற்ற உறவு இருந்து வந்தது என்பதை ஏற்றுக்கொண்டாலும் அ.சா.1-இன் கூற்றுப்படி, மேல்முறையீட்டாளர் அவரது தந்தை வசிக்கும் இடமான கொல்லக்குடிக்கு போக விரும்பியதால், அவருக்கும் மேல்முறையீட்டாளருக்குமிடையே சம்பவம் நடந்த நாளன்று காலையிலேயே சண்டை ஏற்பட்டது என்ற பொருண்மையைக் குறிப்பாக கருத்திற்கொண்டு பார்த்தால், இவ்வழக்கு இ.த.ச., பிரிவு 302-இன் கீழ் வராது என்று வாதுரைத்துள்ளார். இச்சூழ்நிலைகளில், கற்றறிந்த வழக்குரைஞரின் கூற்றுப்படி, மேல்முறையீட்டாளரின் மீதான குற்றச்சாட்டுகளை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டாலுங்கூட இது கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றம் என்பதற்கு அப்பாற்பட்ட ஒரு வழக்காக இருக்கமுடியாது என்று வாதுரைத்தார்.

8.6. சாட்சிகளின் முரண்பாடுகள் தொடர்பாக **ஷ்யாமல் கோஷ் -எதிர்- மேற்கு வங்க மாநில அரசு,** (2012) 7 **எஸ்.சி.சி. 646,** சூழ்நிலை சாட்சியங்கள் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் சந்தேகத்தின் பலனை பெறுவதற்குரியவர் என்ற காரணிகளோடு அக்கறைகொண்ட சாட்சிகள்/உறவுமுறை சாட்சிகளின் சாட்சியம் தொடர்பாக **சரத் பிர்திசந்த் சர்தா -எதிர்- மகாராஷ்டிர மாநில அரசு,** (1984) 4 **எஸ். சி. சி. 116** மற்றும் கு.ந.ச., பிரிவு 313-இன் கீழ் விசாரணையின்போது குற்றஞ்சாட்டப்பட்டவர் அமைதி காப்பதற்கான உரிமைத்தகுதி மற்றும் விசாரணை நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் முக்கிய சான்றாதாரங்களை வைத்து விளக்கமளிக்கும் வாய்ப்பு வழங்கிட கடமைப்பட்டுள்ளதைக் குறித்து, **ராம்நரேஷ் -எதிர்- சத்தீஸ்கர் மாநில அரசு,** (2012) 4 **எஸ். சி. சி. 257** ஆகிய

வழக்குகள் உள்ளிட்ட இந்நீதிமன்றத்தின் பல்வேறு தீர்முடிவுகளின்மீது கற்றறிந்த வழக்குரைஞர் சார்ந்துநின்றார்.

9. மாறாக, மேல்முறையீட்டாளர், இ.த.ச., பிரிவு 302-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்தைப் புரிந்துள்ளார் என்று அரசுத்தரப்பு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் அதன் பொறுப்பை நிறைவேற்றியுள்ளது என்று எதிர்மேல்முறையீட்டாளர்-மாநில அரசின் கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்தார்.

9.1. கற்றறிந்த வழக்குரைஞர், சாட்சிகளின் வாக்குமூலங்களில் உள்ள சிறிய முரண்பாடுகள், அரசுத்தரப்பு வழக்கில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும், குழந்தையுடன் மேல்முறையீட்டாளர் மட்டுமே இருந்தார் என்பது தனிப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் வாதிட்டுள்ளார். இது தொடர்பாக, சாட்சிகளின் வாக்குமூலங்களிலுள்ள சிறிய முரண்பாடுகள் சாதாரணமானவை என்றும், அவை சாட்சிகளின் வாக்குமூலங்களில் தோன்றுவதற்குரியவையே என்றும் பணிந்துரைக்க, **பர்வாடா போகின்பாய் ஹிர்ஜிபாய் -எதிர்- குஜராத் மாநில அரசு,** (1983) 3 **எஸ்.சி.சி 217; கிருஷ்ணா மோச்சி -எதிர்- பீகார் மாநில அரசு,** (2002) 6 **எஸ்.சி.சி. 81 மற்றும் லீலா ராம் -எதிர்- ஹரியானா மாநில அரசு,** (1999) 9 **எஸ்.சி.சி.** 525 ஆகிய வழக்குகளின் தீர்முடிவுகள் உள்ளிட்ட பல்வேறு தீர்முடிவுகளின் மீதும் சார்வுறப்பட்டுள்ளது.

9.2. மேலும், குழந்தை இறப்பதற்கு முன்பு மேல்முறையீட்டாளர்தான் அவருடன் கடைசியாகக் காணப்பட்டார், ஆகவே, அவர்தான் குழந்தை இறந்ததைக் குறித்து நன்கு அறிந்திருப்பார் என்பதால் எத்தகைய சூழ்நிலையில் மரணம் ஏற்பட்டது என்பது குறித்து 1872[6]-ஆம் ஆண்டு சாட்சியச் சட்டத்தின் பிரிவு 106-இன் படி அவர் விளக்கம் அளிக்கவேண்டும் என்றும் கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்துள்ளார். இது தொடர்பாக மாநில அரசு-எதிர்மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் பிரிவு 106-இன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர் விளக்கம் அளிக்கவில்லையெனில், குற்றத்தைத்

---

6. சுருக்கமாக 'சாட்சியச் சட்டம்'

தீர்மானிப்பதற்கு வழிகோலும் சங்கிலித்தொடர் போன்ற சூழ்நிலைகளை நிரூபிப்பதற்கான உறுதியான சான்று இருப்பதால், அதன் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படலாம் எனப் பணிந்துரைக்க **சத்பால் -எதிர்- ஹரியானா மாநில அரசு,** (2018) 6 **எஸ்.சி.சி.** 610 மற்றும் **இராஜஸ்தான் மாநில அரசு -எதிர்- காசி ராம்,** (2006) 12 **எஸ்.சி.சி.** 254 ஆகிய வழக்குகளின் தீர்முடிவுகள் உள்ளிட்ட பல்வேறு தீர்முடிவுகளைச் சார்ந்துநின்றார்.

9.3. மேலும், சம்பவம் நடந்த இடத்தில் மேல்முறையீட்டாளர் இருந்தார் என்பதை அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலானவர்களின் சாட்சியங்கள் தெளிவாக நிரூபித்துள்ளதால், அவரது வேற்றிட வாதம் நிரூபிக்கப்படவில்லை என்று பணிந்துரைக்கப்பட்டுள்ளது. கு.ந.ச., பிரிவு 313-இன் கீழ் மேல்முறையீட்டாளர் சில விளக்கங்களை அளிக்கவேண்டும், ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லையாதலால் குழந்தையின் மரணத்திற்கு அவரே பொறுப்பு என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

9.4. நியாயமான சந்தேகம் என்ற கேள்வி குறித்து பரிசீலிக்கையில், இந்தச் சந்தேகத்தின் பலன் நீட்டிக்கப்படமுடியாது என்றும், அரசுத்தரப்பு எள்ளளவு சந்தேகமுமின்றி அதன் வழக்கை நிரூபிக்கவும்முடியாது என்றும் கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்துள்ளார். இந்த வாதத்தை உறுதிசெய்யும்பொருட்டு, கற்றறிந்த வழக்குரைஞர் (மேற்படி) **ஹரியானா மாநில அரசு -எதிர்- பாகீரத்,** (1999) 5 **எஸ்.சி.சி.** 96 ; **கங்காதர் பெஹெரா -எதிர்- ஒரிசா மாநில அரசு,** (2002) 8 **எஸ்.சி.சி.** 381 மற்றும் **கிருஷ்ணா மோச்சி** ஆகிய வழக்குகள் உட்பட பல்வேறு தீர்முடிவுகளைச் சார்வுற்றார், அதில், ஒரு குற்றவியல் விசாரணையின் அனைத்து கூறுகளையும் அறிவியல் துல்லியத்துடன் நிரூபிப்பது சாத்தியமில்லை என்றும், நியாயமான சந்தேகமானது 'அற்பமானதாகவோ' அல்லது சந்தேகத்திற்கு 'வாய்ப்பும் உள்ளதாகவோ' இருக்கக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வாதுரைத்துள்ளார்.

9.5. எதிர்மேல்முறையீட்டாளர்-மாநில அரசுக்கான கற்றறிந்த வழக்குரைஞர், இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரைப் பொய்யாக சிக்கவைப்பதற்கும் அல்லது உண்மை

குற்றவாளியை பாதுகாப்பதற்குமான காரணம் ஏதும் இல்லை என்று பணிந்துரைத்து அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் ஒரு சார்பு சாட்சிகள் என்று எதிர்த்துரைத்தார். ஒரு சாட்சி ஒரு வழக்கினால் ஏதும் பயனடைவார் எனும்போதுதான் அவர் "அக்கறைக்கொண்ட" சாட்சி என்று அழைக்கப்படுவார் என்று பணிந்துரைப்பது தொடர்பாக **கங்காபவானி -எதிர்- ராயபட்டி வெங்கட் ரெட்டி,** (2013) 15 **எஸ். சி. சி.** 298 மற்றும் **ராஜஸ்தான் மாநில அரசு -எதிர்- கல்கி,** (1981) 2 **எஸ். சி. சி.** 752 என்ற வழக்குகளின்மீது சார்வுறப்பட்டது. இயல்பான சாட்சிகள் அக்கறைகொண்ட சாட்சிகள் அல்லர், சம்பவ இடத்தில் உறவுமுறை சாட்சி இருந்தால், அவரது சான்றுரை புறந்தள்ளப்படமுடியாது.

9.6. அ.சா.1, மரணமுற்ற குழந்தையுடன்தான் இருந்தார் எனக் கண்டறியப்படாததால், கடைசியாக காணப்படல் எனும் கோட்பாடானது அவருக்கு பொருந்தாது என்று எதிர்மேல்முறையீட்டாளர்-அரசுத்தரப்பு சார்பாக பணிந்துரைக்கப்பட்டுள்ளது . மேலும், குழந்தையின் மரணத்தின் மூலம் அ.சா.1 எந்த வகையிலும் பயனடையமாட்டார் என்றும் வாதுரைக்கப்பட்டுள்ளது.

9.7. எனவே, மேல்முறையீட்டாளர் குற்றம் புரிந்துள்ளார் என்பதைத் தவிர வேறு நம்பத்தக்க கருத்துக்கும் வழிவகுக்கின்ற தொடர் சூழ்நிலைகள் முறையாக நிறுவப்படாதபோது, விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் ஒத்திசைவான காண்முடிவுகளில் தலையிடுவதற்கான சந்தர்ப்பம் எதுவும் அமையவில்லை என்று எதிர்மேல்முறையீட்டாளர்-மாநில அரசுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்தார்.

10. எதிரெதிர் வாதங்களை நாங்கள் அக்கறையுடன் பரிசீலித்து, சட்டத்திற்கு பொருந்தத்தக்கவகையில் பதிவாவணங்களை ஆய்வு செய்தோம்.

11. குறிப்பிட்டுள்ளபடி, மேல்முறையீட்டாளர்தான் அவரது மகளை கொலை செய்த குற்றத்திற்கான குற்றவாளி என்ற ஒரே முடிவிற்கு வழிவகுக்கின்ற தொடர் சூழ்நிலைகள் அரசுத்தரப்பால் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டுள்ளன என்று இவ்வழக்கில் விசாரணை நீதிமன்றமும் உயர் நீதிமன்றமும் ஒருங்கியல்வான காண்முடிவுகளைப்

பதிவுசெய்துள்ளன. மேல்முறையீட்டாளரின் தண்டனைக்கு வழிவகுக்கின்ற ஒருங்கியல்வான காண்முடிவுகள், அனைத்து சான்றினையும் மறுமதிப்பீடு செய்யக்கோருவதைப்போன்று இந்த மேல்முறையீட்டில் எதிர்க்கப்பட்டுள்ளன. இந்திய அரசமைப்புச் சட்டம், வகுமுறைக்கூறு 136-இன் கீழ் சிறப்பு அனுமதி மூலம் மேல்முறையீட்டில் உள்ள விடயங்களை ஆய்வு செய்வதற்கான அளவுகோல்கள் இந்த நீதிமன்றத்தால் பல்வேறு தீர்முடிவுகளில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இந்த வழக்கின் பணிந்துரைகளைக் கருத்திற்கொண்டு பார்க்கையில், **பப்பு -எதிர்- உத்தரப் பிரதேச மாநில அரசு, (2022) 10 எஸ்.சி.சி. 321** என்ற வழக்கின் கருத்துரைகளை பயனுள்ள வகையில் நாங்கள் மீண்டும் வலியுறுத்தியுள்ளோம்; அதில், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 134 மற்றும் 136, 1970-ஆம் ஆண்டு, உச்ச நீதிமன்றம் (குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பின் விரிவாக்கம்) பிரிவு 2 ஆகியவற்றைக் குறிப்பிட்டதுடன் தொடர்புடைய தீர்முடிவுகளையும் விரிவாகக் குறிப்பிட்டு, இந்த நீதிமன்றத்தின் வழக்கமான மேல்முறையீட்டுக்கும், சிறப்பு அனுமதி மூலமான மேல்முறையீட்டுக்கும் இடையேயான நுட்பமான வேறுபாட்டை இந்நீதிமன்றம் பின்வருமாறு சுருக்கமாகக் கூறியுள்ளது: -

> "71. ....சிறப்பு அனுமதி மூலமான அத்தகையதொரு மேல்முறையீட்டில், விசாரணை நீதிமன்றமும் உயர் நீதிமன்றமும் சாட்சிகளை மதிப்பீடு செய்தபின்னர், ஒருங்கியல்வான சங்கதி முடிவுகளை வழங்கியுள்ளன, ஒவ்வொரு சங்கதி முடிவும் எதிர்க்கப்படவும்முடியாது அல்லது மற்றொரு நீதிமன்றம் சான்றினை மறுமதிப்பீடு செய்வதைப்போன்று அத்தகையதொரு மேல்முறையீட்டைக் கையாளவும்முடியாது. உண்மையாகவே, விசாரணை நீதிமன்றத்தால் மற்றும் உயர் நீதிமன்றத்தால் செய்யப்படும் மதிப்பீடு, ஏதேனும் சட்டம் அல்லது நடைமுறை பிழையாலோ அல்லது சான்றினைத் தவறாகப்

பொருள்கொள்ளுதலாலோ, அநீதி அல்லது கடுமையான பாதிப்புக்கு வழிகோலும் நீதிசார் நடைமுறை நியமங்களைப் புறக்கணிப்பதாலோ பாதிக்கப்படுவதாகக் கூறப்படுமேயானால் இந்நீதிமன்றமானது கடுமையான அல்லது பேரிடரான நீதி வழுவலைத் தடுக்கும்பொருட்டு உரிய வழக்குகளில் தலையீடு செய்யலாம், ஆனால், அத்தகையதொரு நடைமுறை, சட்ட முரண்பாடுகள் வெளிப்படையாகத் தெரியும் விதிவிலக்கான மற்றும் அரிய நேர்வுகளில் மட்டுமே மேற்கொள்ளப்படமுடியும். சுருங்கக்கூறின், இது முறையான மேல்முறையீடு குறித்த விடயமல்ல. சான்றினை சரியாக மதிப்பீடு செய்ததன் அடிப்படையிலான ஒருங்கியல்வான சங்கதி முடிவுகளில் இந்த நீதிமன்றம் தலையிடுவதில்லை அல்லது விசாரணை நீதிமன்றத்தால் எடுக்கப்பட்டு உயர் நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட கருத்துரைக்கு மாறான ஒரு கருத்தை எடுக்கும்பொருட்டு, இந்நீதிமன்றம் சான்றினை மறுமதிப்பீடு செய்வதும் இம்மேல்முறையீடுகளின் நோக்கமுமல்ல.''

11.1. **மேகலா சிவய்யா -எதிர்- ஆந்திரப் பிரதேச மாநில அரசு,** (2022) 8 எஸ்.சி.சி. 253 என்ற வழக்கில், இந்த அறுதியுரை பின்வருமாறு மீண்டும் எடுத்துரைக்கப்படுகிறது:

''15. வகுமுறைக்கூறு 136-ஆனது விரிவான பொருள்விளக்கத்தைக் கொண்டுள்ளது, மேற்படி வகுமுறைக்கூறின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், எந்தவொரு நுட்பமான தடைகளாலும் தடுக்கப்படுவதில்லை என்பது நீதிமுறை தீர்ப் ரையின் வாயிலாக நன்கு அறுதியிடப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த மேலோங்கிய மற்றும் விதிவிலக்கான அதிகாரமானது அரிதாகவும், நீதியின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காகவும் மட்டுமே செயலுறுத்தப்படவேண்டும்.

எனவே, மேல்முறையீட்டின் கீழான தீர்ப்புரையானது, சான்றினை ஏதோவொரு வகையில் தவறாகப் புரிந்து கொள்வதாலோ, தவறாகப் பொருள்கொள்வதாலோ, முக்கிய சான்றினைப் புறக்கணிப்பதாலோ கடுமையான நீதி வழுவலில் முடிவடைகிறபோது, நீதியின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு இந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிப்பதோடல்லாமல் அதில் தலையிடவும் நன்கு எதிர்பார்க்கப்படுகிறது.

16. விசாரணை நீதிமன்றத்தாலும், உயர் நீதிமன்றத்தாலும் ஒருங்கியல்வாக எடுக்கப்பட்ட சங்கதி முடிவுகள் சரியானவையா? இல்லையா? என்பதைப் பரிசீலிக்கும்பொருட்டு சான்றினை மறு மதிப்பீடு செய்வது என்பது இந்த நீதிமன்றத்தின் வழக்கமல்ல. முக்கியமான சான்றினைத் தவறான பொருள்கொள்வதன் அல்லது புறக்கணிப்பதன் காரணமாக ஏற்படக்கூடிய சில சட்ட முரண்பாடு அல்லது பேரிடரான மற்றும் கடுமையான நீதி வழுவல் சில வெளிப்படையாகத் தெரியும் அரிய மற்றும் விதிவிலக்கான நேர்வுகளில் மட்டுமே, இந்நீதிமன்றம் அத்தகைய சங்கதி முடிவுகளில் தலையிடும்."

12. மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர், அரசுத்தரப்பு வழக்கில் குறிப்பாக, சாட்சிகளின் பல்வேறு பொருத்தமற்ற மற்றும் முரண்பாடான கூற்றுகளைக் கருத்திற்கொண்டு பார்க்கையில், பல்வேறு குறைபாடுகளும் விடுபாடுகளும் உள்ளன என்றும், சார்வுறப்பட்ட காரணிகள், மேல்முறையீட்டாளரின் குற்றம் குறித்த காண்முடிவிற்கு வழிவகுக்கின்ற சூழ்நிலைகளில் அத்தகைய தொடர்பினை வழங்கவில்லை என்றும் வாதிட முயன்றுள்ளார். இத்தகைய பணிந்துரைகளை விவாதிக்கையில், தொடர்புடைய மேற்படி தீர்முடிவுகளிலிருந்
கவனிக்கத்தக்கவகையில், இந்த வழக்குக்குப் பொருந்தத்தக்க பயனளிக்கக்கூடிய அடிப்படைக் கோட்பாடுகளை நாம் குறித்துக்கொள்ளலாம்.

12.1. (மேற்படி) **ஷரத் பிர்திசந்த் சர்தா** என்ற வழக்கில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ள கோட்பாடுகள், சூழ்நிலைச் சான்றின் அடிப்படையில் ஒரு வழக்கை நிரூபிப்பதற்கு நீதிமன்றங்களின் வழிகாட்டுதல்களாக விளங்குகின்றன. அதில், இந்த நீதிமன்றம் **ஹனுமந்த் -எதிர்- மத்தியப் பிரதேச மாநில அரசு, ஏ. ஐ. ஆர். 1952 எஸ். சி. 343** என்ற வழக்கின் புகழ்பெற்ற தீர்முடிவை மேற்கோள்காட்டி, சூழ்நிலைச் சான்றுகளின் அடிப்படையில் ஒரு வழக்கை நிரூபிப்பதற்கான ஐந்து பொன்னான கோட்பாடுகளைப் பின்வருமாறு குறிப்பிட்டது:

"152. **ஹனுமந்த்** என்ற வழக்கில் மாண்புமிகு நீதியரசர் திரு. மகாஜன் அவர்கள் வகுத்துரைத்துள்ளதைக் குறிப்பிடுவது பயனுடையதாக இருக்கலாம்:

"சான்று, சூழ்நிலை சார்ந்ததாக இருக்கும்பட்சத்தில், எச்சூழ்நிலைகளிலிருந்து குற்றம் குறித்த முடிவு எடுக்கப்படுகிறதோ, அவை முதல் நோக்கிலேயே முழுமையாக நிறுவப்படவேண்டும், அவ்வாறு நிறுவப்பட்ட அனைத்து சங்கதிகளும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தன்மை குறித்த கருத்துடன் மட்டுமே ஒத்திசைவாக இருக்கவேண்டும் என்பதை நினைவில் கொள்வது சிறந்தது. "மீண்டும், சூழ்நிலைகள் முடிவெடுக்கும் தன்மையுடைய-தாகவும், பாங்குடையதாகவும் இருக்கவேண்டும், மேலும் அவை நிரூபிக்கப்படவேண்டிய ஒன்றைத் தவிர மற்ற அனைத்து கருத்துகளையும் விலக்கிவிடவேண்டும். அதாவது, குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றமற்றத்தன்மைக்கு ஏற்றவாறான முடிவுக்கான எந்த நியாயமான காரணத்தையும் விட்டுவிடாத முழுமைபெற்ற சான்றுகள் தொடர்ச்சியாக இருக்கவேண்டும், குற்றஞ்சாட்டப்பட்டவரால்

புரியப்பட்ட செயல் எந்த மனிதனாலும் செய்யக்கூடிய சாத்தியத் தன்மைக்குட்பட்டிருக்கவேண்டும்."

153. குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக ஒரு வழக்கு முழுமையாக நிரூபிக்கப்படுவதாகச் சொல்லவேண்டுமென்றால், பின்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்பது இந்தத் தீர்முடிவினைக் கூர்ந்தாராய்வதிலிருந்து தெரியவருகிறது:

(1) எந்தச் சூழ்நிலைகளிலிருந்து குற்றம் குறித்த முடிவு எடுக்கப்படுகிறதோ, அவை முழுமையாக நிரூபிக்கப்படவேண்டும்.

தொடர்புடைய சூழ்நிலைகள் "கண்டிப்பாக நிரூபிக்கப்படவேண்டும் அல்லது நிரூபிக்கப்படவேண்டும்" என்பதன்றி "நிரூபிக்கப்படலாம்" என்பதாக இருக்கக்கூடாது என இந்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். **சிவாஜி சஹாப்ராவ் போபடே -எதிர்- மகாராஷ்டிர மாநில அரசு**[7] என்ற வழக்கில், இந்த நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளபடி "நிரூபிக்கப்படலாம்" மற்றும் "கண்டிப்பாக நிரூபிக்கப்படவேண்டும் அல்லது நிரூபிக்கப்படவேண்டும்" ஆகியவற்றிற்கு இடையே இலக்கணம் சார்ந்த வேறுபாடுகள் மட்டுமல்லாமல் சட்டஞ்சார்ந்த வேறுபாடுகளும் உள்ளன, அதில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துரைகளாவன:

"நிச்சயமாக, நீதிமன்றம் குற்றவாளி எனத் தீர்மானிப்பதற்கு முன்பு குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத்தை *புரிந்திருக்கலாம்* என்பதாகவே அல்லாமல் *கட்டாயம் புரிந்திருக்கவேண்டும்* என்பது ஓர் அடிப்படைக் கோட்பாடாகும், மேலும், 'இருக்கலாம்' என்பதற்கும், 'இருக்கவேண்டும்'

---

7 (1973) 2 எஸ்.சி.சி. 793

என்பதற்கும் இடையேயான உணர்வுப்பூர்வமான இடைவெளி அதிகமானது, மேலும் அவை உறுதியான முடிவுகளிலிருந்து தெளிவற்ற அனுமானங்களைப் பிரிக்கின்றது."

(2) இவ்வாறு நிறுவப்பட்ட பொருண்மைகள், குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றம் குறித்த புனைக்கருத்துடன் மட்டுமே ஒத்துப்போகவேண்டும், அதாவது, அவை குற்றஞ்சாட்டப்பட்டவர்தான் குற்றவாளி என்பதைத் தவிர, வேறு எந்தப் புனைக்கருத்தின்பேரிலும் விளக்கமளிக்க வேண்டியதில்லை.

(3) சூழ்நிலைகள் முடிவெடுக்கும் தன்மையுடையதாகவும் பாங்குடையதாகவும் இருக்கவேண்டும்.

(4) அவை நிரூபிக்கப்பட வேண்டியதைத் தவிர, ஒவ்வொரு சாத்தியமான புனைக்கருத்தினையும் நீக்கவேண்டும், மற்றும்

(5) குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றமற்றத்தன்மைக்கு ஏற்றவாரான முடிவுக்கு, எந்த நியாயமான காரணத்தையும் விட்டுவிடாத முழுமையான சான்று தொடர்ச்சியாக இருக்கவேண்டும், மேலும், குற்றஞ்சாட்டப்பட்டவரால் புரியப்பட்ட செயல் எந்த மனிதனாலும் செய்யக்கூடிய சாத்தியத்தன்மைக்கு உட்பட்டிருக்கவேண்டும்.

154. ஐந்து பொன்னான கோட்பாடுகள் என அவற்றை நாம் சொல்வோமானால், அவை சூழ்நிலைச் சான்றுகளின் அடிப்படையில் ஒரு வழக்கை மெய்ப்பிப்பதற்கான சான்றுக்கான பஞ்சசீலக் கொள்கைகளாகத் திகழ்கின்றன.

155. குற்றத்திற்குரிய கூறுகள் இல்லாமல், சூழ்நிலைச் சான்றினைச் சார்ந்திருக்கும் குற்றவியல் வழக்கில், சான்றாதாரத்திற்கான

பாங்கினைப் பொறுத்தவரையில், **கிங் -எதிர்- ஹாரி, (1952 என்.இசட்.எல்.ஆர். 111)** என்ற வழக்கில் மாண்புமிகு நீதியரசர் திரு. கிரேசன் அவர்களால் (மேலும் 3 நீதியரசர்கள் ஒத்திசைந்து) வகுத்துரைக்கப்பட்ட சான்றாதாரம் குறித்த சட்டக் கருத்துகளாவன:

"அவருக்கு தண்டனைத் தீர்ப்பளிக்கப்படலாம் என்பதற்கு முன், நிச்சயமாக நடத்தைரீதியாகப் புரியப்பட்டிருக்கும் குற்றச்செயலைத் தெரிவிக்கும் அத்தகைய சூழ்நிலைகளைக்கொண்டு, சந்தேகத்திற்கு இடங்கொடுக்கும் காரணம் எதனையும் விட்டுவிடாமல் மரணம் குறித்த சங்கதி மெய்ப்பிக்கப்படவேண்டும். கொலைக்கான காரணத்தைத் தவிர, பகுத்தறிவான வேறு எந்த புனைக்கருத்தின்பேரில் எதுவும் கூறப்படவில்லையென சூழ்நிலைச் சான்று மிகவும் நம்பத்தகுந்ததாகவும், நீதியராயத்தை நம்பச் செய்யும் அளவுக்கு வற்புறுத்துவதாகவும் இருக்கவேண்டும்"

156. நீதியரசர் கோடார்டு, "நடத்தைரீதியாக நிச்சயமாக" என்ற சொற்றொடரை "நிச்சயமாகக் குற்றம்புரிந்திருப்பதைத் தெரிவிக்கும் அத்தகைய சூழ்நிலைகள்" என்பதாகச் சிறிதளவில் மாற்றியமைத்துள்ளார்.

157. உறுதியான மற்றும் தெளிவான சாட்சியம் இருந்தால் மட்டுமே ஒரு வழக்கை நிரூபித்திருப்பதாகக் கூறமுடியுமே தவிர, எந்த நபரும் முற்றிலும் நடத்தையை அடிப்படையாகக்கொண்டு தண்டிக்கப்பட முடியாது என்னும் குற்றவியல் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாட்டையே இது குறிப்பிடுகிறது....." "

12.2. சாட்சிகளின் கூற்றுகளிலுள்ள பொருத்தமின்மைகளையும் மற்றும்/அல்லது முரண்பாடுகளையும் பொறுத்தவரையில், (மேற்படி) **ஷியாமல் கோஷ்** என்ற வழக்கில், அரசுத்தரப்பு வழக்கை முக்கியமான அளவில் பாதிக்கின்ற கடுமையான

முரண்பாடுகளுக்கும் விடுபாடுகளுக்கும் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களிலுள்ள சிறிய அளவிலான மாறுபாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளை இந்த நீதிமன்றம் பின்வருமாறு விளக்கியுள்ளது: -

"68. மேற்படி விவாதத்திலிருந்து, முரண்பாடுகளோ அல்லது விடுபாடுகளோ முக்கியமானதாக இருக்கவேண்டும் என்பதையும், அவை மட்டுமே சில கடுமையான விளைவுகளை முரணாக்குவதாக இருக்கலாம் என்பதையும் அறியமுடிகிறது. **ஒவ்வொரு விடுபாடும் சட்டத்திலுள்ள முரணான இடத்தை எடுத்துக்கொள்ளாது என்பதால், அரசுத்தரப்பு வழக்கை சந்தேகிப்பதற்கான அடிப்படையாக இருக்கும். அரசுத்தரப்பு வழக்கின் மையக் கருத்தைப் பாதிக்காத அற்பத்தன்மையுடைய சிறிய முரண்பாடுகள், மாறுபாடுகள் அல்லது ஒப்பனைகள் ஆகியவற்றை அரசுத்தரப்பு சான்றினை முற்றிலும் நிராகரிப்பதற்கான காரணமாக எடுத்துக்கொள்ளக்கூடாது.** சான்றினை ஏற்காமலிருக்கும்பொருட்டு மாறுபாட்டுக்கு நிகரான அத்தகைய விடுபாடுகள் நீதிமன்றத்தில் சான்றாதார முரண்பாடுகளை அல்லது மாறுபாடுகளை உண்டாக்குவதோடு, சாட்சிகள் மற்றும் பிற சாட்சிகளின் உண்மைத்தன்மை அல்லது நம்பகத்தன்மை குறித்து கடுமையான சந்தேகத்தை உருவாக்குகிறபோதுதான் நீதிமன்றங்கள் அத்தகைய சான்றின்மீது நம்பகமாக சார்வுறும் நிலையில் இருக்கலாகாது. அரசுத்தரப்பு வழக்கை முக்கியமான அளவில் பாதிக்கும் கடுமையான முரண்பாடுகளும், விடுபாடுகளும், சாட்சிகளின் வாக்குமூலத்திலுள்ள சிறியளவிலான மாறுபாடுகளையே தெளிவாக வேறுபடுத்திக் காட்டுவதாக புரிந்துகொள்ளப்படவேண்டும். முந்தையது அரசுத்தரப்பு வழக்கின் சாட்சிய மதிப்பீட்டின்பேரில் சட்டப்படி பாதிப்பை ஏற்படுத்தலாம்

என்றாலும், பிந்தையது அரசுத்தரப்பின் வழக்கை கடுமையான அளவில் பாதிக்காது." (வலியுறுத்திக் கூறப்பட்டது)

12.3. (மேற்படி) **பர்வாடா போகின்பாய் ஹிர்ஜிபாய்** என்ற வழக்கில், ஒருங்கியல்வான சங்கதி முடிவுகள், சான்று இல்லாமை அல்லது ஏற்கத்தகாத சான்று அல்லது முரணாக இருத்தல் அல்லது சில முக்கிய சான்றுகளைக் கவனிக்கத்தவறியதன் காரணமாக பாதிப்படைதல் என்பதை அடிப்படையாகக்கொண்டவை எனக் காட்டப்பட்டாலன்றி, அவற்றை சிறப்பு அனுமதி மூலமான இந்த மேல்முறையீட்டில் மீண்டும் எடுக்கமுடியாது என்று இந்நீதிமன்றம் விளக்கியுள்ளது. அவ்வழக்கில், விசாரணை நீதிமன்றத்தாலும் உயர் நீதிமன்றத்தாலும் ஒருங்கியல்வாகப் பதிவுசெய்யப்பட்ட குற்றம் குறித்த காண்முடிவு, முதன்மையாக சான்றிலுள்ள சிறிய முரண்பாடுகளின் காரணமாக எதிர்க்கப்பட்டது, அதற்கு இந்நீதிமன்றம், இதுபோன்ற சிறிய முரண்பாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கமுடியாது என்பதை வலியுறுத்திக்கூறியது. ஒரு சாட்சிக்கு மறக்கமுடியாத அளவிலான நினைவாற்றல் இருக்குமென எதிர்ப்பார்க்கமுடியாது என்றும், ஒரு சாட்சி நிகழ்வுகளால் குறிப்பாக, எதிர்பாராத நிகழ்வுகளால் தாக்கத்திற்குள்ளாகும் சாத்தியமுள்ளது என்றும், ஒரு நபருக்கும் மற்றொரு நபருக்கும் இடையே கவனிக்கும் திறன் வேறுபடும் என்றும், பெரும்பாலான மக்கள் உரையாடல்களையோ அல்லது தொடர்வரிசைப்படியாக நிகழ்வுகளையோ துல்லியமாக நினைவுகூர முடியாது என்றும், எப்படியானாலும் சாட்சி உண்மையாக இருந்தாலுங்கூட, நீதிமன்றத்திலுள்ள சூழ்நிலையாலும், துளைத்தெடுக்கும் குறுக்கு விசாரணையாலும், இன்னும் பிறவற்றாலும் அவர் அச்சப்படலாம் என்பன உள்ளிட்ட பல காரணங்களை இந்த நீதிமன்றம் விளக்கியுள்ளது. இந்தத் தீர்முடிவிலிருந்து பயன்பெறும்வகையில் பின்வரும் பத்தி குறிப்பிடப்பட்டுள்ளது:

"5..... பரிசீலிக்கப்பட்டுள்ள அவர்களது சாட்சியம் ஏற்பதற்குரியதாகும். அது அமர்வு நீதிமன்றத்தால் பதிவுசெய்யப்பட்டு, உயர் நீதிமன்றத்தால்

உறுதிசெய்யப்பட்ட ஒரு தெளிவான சங்கதி முடிவாகும்: (1) சான்றின் அடிப்படையில் இல்லாத ஒரு காண்முடிவு (2) எந்தவொரு பகுத்தறிவான நபரும், சான்றின் முகமதிப்பைக் கொண்டு முடிவு எடுக்கமாட்டார் என்றாலும், அவ்வாறாக எடுக்கப்படும் காண்முடிவு முரணானதாக இருக்கிறது (3) காண்முடிவு ஏற்கத்தகாத சான்றின் அடிப்படையில் அமைக்கப்பட்டு, அச்சான்றினைப் புறந்தள்ளினால், அது அரசுத்தரப்பு வழக்கை எதிர்மறையாக்கிவிடும் அல்லது போதியளவில் அதன் மதிப்பைக் கெடுக்கும் அல்லது ஊறு செய்யும் அல்லது (4) குற்றஞ்சாட்டப்பட்டவரின் சார்பாக சாய்ந்துவிடக்கூடிய சில முக்கியச் சான்றுகள் புறக்கணிக்கப்பட்டு, கவனிக்கப்படாமல் அல்லது தவறாகப் புறந்தள்ளப்பட்டுள்ளது என்பதாக நிலைநாட்டப்பட்டாலன்றி, அத்தகையதோர் ஒருங்கியல்வான சங்கதி முடிவு, சிறப்பு அனுமதியிலான மேல்முறையீடு மூலம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்படமுடியாது. தற்போதைய வழக்கு அத்தகைய தன்மையுடைய வழக்கல்ல. அமர்வு நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டு, உயர் நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்ட குற்றம் குறித்த காண்முடிவு, சான்றுகளிலுள்ள சிறு முரண்பாடுகளின் அடிப்படையிலேயே எதிர்க்கப்பட்டது. **மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் சிரத்தையுடன் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சிறிய முரண்பாடுகளைப் பொறுத்தவரையில், சாட்சியத்தை மீண்டும் மதிப்பீடு செய்வதையோ, அல்லது மறு மதிப்பீடு செய்வதையோ உகந்ததாகவோ அல்லது அனுமதிக்கத்தக்கதாகவோ நாங்கள் கருதவில்லை. சிறிய முரண்பாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கமுடியாது. இதற்கான காரணங்கள் தெளிவாக உள்ளன:**

"(1) **பெரும்பாலும் சாட்சிகளுக்கு ஒரு சம்பவம் குறித்த மறக்கமுடியாத நினைவாற்றல் இருக்கும் என்றும், அவர்கள் அவ்விவரங்களை நினைவு கூர்வர் என்றும் எதிர்பார்க்கமுடியாது.** அது மனத் திரையில் ஓர் ஒளி நாடா ஓடுவதுபோல் அல்ல.

(2) **ஒரு சாட்சி நிகழ்வுகளின் தாக்கத்திற்குள்ளாவார் என்பது பொதுவாக நிகழக்கூடியதாகும். சாட்சி, நிகழ்வு குறித்து எதிர்பார்த்திரு கமாட்டார், இது சிலசமயத்தில் ஆச்சரியத்திற்குரியதாகவும் இருக்கிறது.** எனவே, மன உணர்வுக்கூறுகள் விவரங்களை உள்வாங்கிக்கொள்வதற்கேற்ப இருக்கும் என எதிர்பார்க்கமுடியாது

(3) கவனிக்கும் திறனானது நபருக்கு நபர் வேறுபடும். ஒருவர் என்ன கவனிக்கிறாரோ, அதை மற்றொருவர் கவனிக்காமல் இருக்கலாம். ஒரு பொருளோ அல்லது அசைவோ ஒருவரின் மனதில் அதன் உருவத்தை பதியவைக்கலாம், அதேவேளையில், அது மற்றவரின் கவனத்திற்கு வராமல் போகலாம்.

(4) பெரும்பாலான மக்களால் ஓர் உரையாடலை துல்லியமாக நினைவுகூர்ந்து, அவர்கள் பயன்படுத்திய அல்லது அவர்கள் கேட்ட அதே வார்த்தைகளை மீண்டும் கூறமுடியாது. உரையாடலின் முக்கிய நோக்கத்தை மட்டுமே அவர்களால் நினைவில் கொள்ளமுடியும். ஒரு சாட்சியை மனித ஒலிப்பதிவியாக எதிர்பார்ப்பது உண்மைக்கு புறம்பானது.

(5) ஒரு சம்பவத்தின் சரியான நேரம் அல்லது அந்த நிகழ்வின் கால அளவைப் பொறுத்தவரையில், பொதுவாக மக்கள் விசாரணையின்போது தங்கள் மதிப்பீடுகளை ஒரு கணப்பொழுதில் ஊகித்துக்கூறிவிடுவர். இத்தகைய விடயங்களில் மக்கள் மிகவும் துல்லியமான அல்லது

நம்பத்தக்க மதிப்பீடுகளைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. மீண்டும், இது தனி நபர்களின் காலக்கணிப்பைச் சார்ந்தது, இதுவும் நபருக்கு நபர் மாறுபடக்கூடியதாகும்.

(6) **பொதுவாக, ஒரு சாட்சி, ஒரு குறுகிய காலகட்டத்தில் அல்லது மிக விரைவாக அடுத்தடுத்து நிகழும் நிகழ்வுகளை துல்லியமாக நினைவுகூர்வதற்கு எதிர்பார்க்க முடியாது. அந்தச் சாட்சி பின்னர் விசாரிக்கப்படும்போது, குழப்பமடைவதற்கோ, கலக்கமடைவதற்கோ வாய்ப்புள்ளது.**

(7) சாட்சி ஒருவர் முற்றிலும் உண்மையாக இருந்தாலும், நீதிமன்றச் சூழ்நிலையாலும், வழக்குரைஞரால் துளைத்தெடுக்கப்படும் குறுக்கு விசாரணையாலும் அச்சமடைந்து, பதற்றத்தின் காரணமாக சங்கதிகளை மாற்றிக்கூறுவதும், தொடர் நிகழ்வுகளினால் குழப்பமடைவதும் அல்லது அந்தக் கணப்பொழுதில் கற்பனையாக விவரங்களைக் கூறுவதும் உண்டு. சாட்சிதான் பார்த்த சம்பவத்தை உண்மையாகவும், நேர்மையாகவும் சொன்னாலுங்கூட, சில சமயங்களில் அச்சாட்சியின் ஆழ்மனது அச்சத்தின் காரணமாக அவரை முட்டாள்தனமாகவோ, அல்லது நம்பத்தகாதவராகவோ பார்க்கும்படி இயக்கிவிடுகிறது. இது ஒருவகையில் பார்த்தால், அந்தக் கணப்பொழுதில் செயல்படுத்தப்படும் உளவியல் ரீதியான தற்காப்புமுறையாகும்.

(வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது)

12.4. (மேற்படி) **கங்காதர் பெஹெரா** என்ற வழக்கில், நீதிமன்றம் பின்வருமாறு கருத்துரைக்கையில், சான்றுரைகளிலுள்ள சாதாரணமான முரண்பாடுகள், நீதிமன்றத்தில் இயல்பாக நிகழக்கூடியவையே என்று மீண்டும் சிறப்புற எடுத்துரைத்தது: -

"15. சான்றுரையிலுள்ள சாதாரணமான முரண்பாடுகள் என்பன, சாட்சி என்னதான் நியாயமானவராகவும், உண்மையானவராகவும் இருந்தாலும், பொதுவாக கவனிப்பதில் ஏற்படும் பிழைகளாலும், காலப்போக்கிலும் மற்றும் பொதுவாக ஏற்படும் நினைவுக் குறைபாடுகளாலும், சம்பவம் நிகழ்ந்த சமயத்தில் ஏற்படும் அதிர்ச்சி, பயம் போன்றவற்றால் மனநிலையில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாகவும் எப்போதுமே இருக்கின்றன. சான்றாதார முரண்பாடுகள் என்பன சாதாரணமானவை அல்ல, அவற்றை ஒரு சாதாரணமான நபரிடமிருந்து எதிர்பார்க்கமுடியாது. வகைப்படுத்தப்படவேண்டிய முரண்பாடுகளை நீதிமன்றங்கள்தான் வகைப்படுத்தவேண்டும். சாதாரணமான முரண்பாடுகள், ஒரு தரப்பினரின் வழக்கின் நம்பகத்தன்மையைச் சீர்குலைக்காதபோதிலும், முக்கியச் சான்றிலுள்ள முரண்பாடுகள் அவ்வாறு செய்கின்றன. இந்த அம்சங்கள் அண்மையில் **கிருஷ்ணா மோச்சி -எதிர்- பீகார் மாநில அரசு** [(2002) 6 **எஸ். சி. சி.** 81] என்ற வழக்கில் சிறப்புறக் கூறப்பட்டுள்ளது...."

12.5. நெருங்கிய உறவுமுறை சாட்சிகளின் சாட்சிய மதிப்பீடு குறித்த அணுகுமுறையைப் பொறுத்தவரையில், (மேற்படி) **கங்காபவானி** என்ற வழக்கில் இந்நீதிமன்றம் அதன் கோட்பாடுகளைப் பின்வருமாறு விளக்கியுள்ளது: -

"15. .....மேற்படி வழக்கில் குற்றவாளி/குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பொறுத்தவரையில், சாட்சிகளின் நெருங்கிய உறவினர்களின் சான்றுரைகளின்மீது சார்ந்து நின் ஏதும் முடிவெடுப்பதற்கு முன்பாக, அச்சான்றுரையைக் கவனமாக ஆராயந்து மதிப்பீடு செய்யவேண்டும் என்பது அறுதியிடப்பட்ட சட்ட கருத்துரையாகும். ஆதலால், சாட்சிகள் ஒருவருக்கொருவர் அல்லது மரணமுற்றவருடன் தொடர்புடையவர்கள்

என்பதன் அடிப்படையில் அச்சாட்சியத்தை மறுக்கமுடியாது. **சான்றுரையில் உண்மை சூழ்ந்திருந்து, அது உறுதியானதாகவும், உண்மையானதாகவும், நம்பத்தக்கதாகவும் இருக்கும் வழக்குகளில் அதன் மீது சார்வுறலாம் மற்றும் கட்டாயமாகச் சார்வுறவேண்டும்.** (காண்க: பாகலூ லோத் -எதிர்- உ.பி. மாநில அரசு) [(2011) 13 எஸ்.சி.சி. 206]"

(வலியுறுத்திக் கூறப்பட்டது)

12.6. (மேற்படி) **ராம்நரேஷ்** என்ற வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் விசாரணையின்போதும், நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும்போதும், குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 313-இன் கீழ் அமைதிகாப்பதற்கு அவருக்குள்ள உரிமையை நீதிமன்றம் அங்கீகரித்துள்ளபோதிலும், அதேசமயத்தில் அமைதிகாப்பதாலும், சட்டத்திற்கிணங்க எதிர்நிலை அனுமானத்தை ஈர்ப்பதற்கு அனுமதிக்குந்தன்மை உள்ளிட்ட, அவருக்கு எதிரானதாகத் தோன்றக்கூடிய சூழ்நிலைகளை விளக்குவதற்கான வாய்ப்பை பயன்படுத்தாமல் இருப்பதாலும் ஏற்படக்கூடிய விளைவுகளை சிறப்புற எடுத்துக்கூறியுள்ளது. இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு கருத்துரைத்துள்ளது:

"49. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 313-இன்படி, குற்றஞ்சாட்டப்பட்டவர் விசாரணையின்போதும், நீதிமன்றம் முன்பாகவும் அமைதிகாப்பதற்கு சுதந்திரம் உள்ளது. **குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 313-இன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டிருந்தாலுங்கூட, அவர் அமைதி காப்பதற்கோ அல்லது முழுவதும் மறுத்துரைப்பதற்கோ உரிமையுள்ளது, உண்மையில், சட்டத்திற்கேற்ப அது அனுமதிக்கப்படலாகும்வகையில், எதிர்நிலை அனுமானம் உள்ளிட்ட அனுமானத்தை ஈர்ப்பதற்கு நீதிமன்றத்திற்கு உரிமையுள்ளது என்பதாகும்.**

*** *** ***

52. கு.ந.ச., பிரிவு 313-இன் கீழ் சான்றாவணத்தை குற்றஞ்சாட்டப்பட்டவரின் பார்வைக்கு வைக்கும் பொறுப்பு நீதிமன்றத்தைச் சார்ந்தது என்பது அறுதியிடப்பட்ட சட்டக் கோட்பாடாகும். குற்றவியல் நடைமுறைச் சட்ட வகையத்தின் கீழ் பதிவுசெய்யப்படும் வாக்குமூலத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றானது, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக உள்ள சூழ்நிலைகளை விளக்கி, அவர் விரும்பும்பட்சத்தில், அவரது எதிர்வாதத்தை முன்வைப்பதற்கான வாய்ப்பளிப்பதாகும். ஆனால், அவர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தாவிட்டால், சட்டத்தின் விளைவுகளை எதிர்கொண்டேயாகவேண்டும். **குற்றஞ்சாட்டப்பட்டவர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டால்,** கு.ந.ச., பிரிவு 313-இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட அவரது வாக்குமூலம், அரசுத்தரப்பு வழக்குக்கு ஆதரவளிக்கும் பட்சத்தில், அவருக்கு எதிராக தண்டனைத் தீர்ப்பளிப்பதற்கு அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். பிந்தையதாக உள்ளதன் கீழுங்கூட, அவர் சட்டப்படியான விளைவுகளை எதிர்கொள்கிறார்."

(வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது)

12.7. சாட்சியச் சட்டத்தின் பிரிவு 106-இன்படி விளக்குவதற்கான கடப்பாடு குறித்து இந்நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்ட கோட்பாடுகளும், விளக்கமின்மையால் ஏற்படும் விளைவுகளும் இந்நீதிமன்றத்தால் (மேற்படி) **சத்பால்** என்ற வழக்கில் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளன: -

"6. நாங்கள் தொடர்புடைய பணிந்துரைகளையும், ஆவணச் சான்றினையும் பரிசீலித்துள்ளோம். இந்தச் சம்பவம் குறித்த கண்ணுற்ற சாட்சி எவரும் இல்லையென்றாலும், மரணமுற்றவர் மேல்முறையீட்டாளருடன் கடைசியாகக் காணப்பட்டார் என்ற சங்கதியுடன் இணைந்த சூழ்நிலைகள் மட்டுமே உள்ளன. குற்றச் சட்டவியலும், பெருமளவிலான

நீதிமன்ற முன்தீ களும், சூழ்நிலைச் சாட்சியத்தின் ஓர் அம்சமான கடைசியாகக் காணப்படல் என்ற கோட்பாட்டை துணையாகக்கொண்டு, அடிப்படைக் கோட்பாடுகளை மறுபரிசீலனை செய்வதற்கான ஒரு சிறிய வாய்ப்பை ஏற்படுத்துகிறது. சுருக்கமாகக் கூறினால், அந்த ஒரே குற்றச்சாட்டின்பேரிலேயே தண்டனைத் தீர்ப்பளிப்பதற்கு அதுவே ஒரு வலுவற்ற சான்றாக இருக்கலாம். **இருப்பினும், மரணமுற்றவர் குற்றஞ்சாட்டப்பட்டவருடன் கடைசியாகக் காணப்பட்ட நேரத்திற்கும், சடலம் கைப்பற்றிய நேரத்திற்கும் மிகவும் நெருங்கிய தொடர்பிருந்து, அது மற்ற சூழ்நிலைகளுடன் இணைந்திருக்கிறபோது மரணம் நிகழ்ந்திருக்கக்கூடிய சூழ்நிலைகள் குறித்து குற்றஞ்சாட்டப்பட்டவர் சாட்சியச் சட்டத்தின் பிரிவு 106-இன் கீழ் விளக்கமளிப்பதற்கு கடமைப்பட்டவராகிறார். குற்றஞ்சாட்டப்பட்டவர் விளக்கம் ஏதும் அளிக்காமலிருந்தாலோ, தவறான விளக்கத்தை அளித்திருந்தாலோ, தலைமறைவாகியிருந்தாலோ உள்நோக்கம் நிரூபிக்கப்பட்டு, மற்றவற்றுக்கிடையே, கைப்பற்றுதல் என்ற முறையில் அல்லது வேறுவகையில் குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றமற்றவர் என்ற எந்தச் சாத்தியமான புனைக்கருத்துக்கும் மாறாக அவருடைய குற்றம் குறித்த முடிவுக்கே வழிகோலுகின்ற சங்கிலித் தொடர் போன்ற சூழ்நிலைகள் அமைந்து, அவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகள் இருந்தால், அதன் அடிப்படையில் தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்படலாம். சங்கிலித் தொடர் போன்ற சூழ்நிலைகளில் ஏதேனும் சந்தேகமோ அல்லது தடையோ ஏற்பட்டால், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கே சந்தேகத்தின் பலன் கிடைக்கவேண்டும்.** எனவே, ஒவ்வொரு வழக்கும்

அக்கோட்பாட்டின் துணையுடன் அதற்குரிய சங்கதிகளின் அடிப்படையில் ஆய்வுசெய்யப்படவேண்டும்.

(வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது)

12.8. **சத்ய சிங் மற்றும் ஒருவர் -எதிர்- உத்தரகாண்ட் மாநில அரசு,** (2022) 5 **எஸ்.சி.சி. 438** என்ற வழக்கில், அரசுத்தரப்பு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான அடிப்படை சங்கதிகளை நிரூபிக்கத் தவறும்பட்சத்தில், குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை நிரூபிக்கும் அரசுத்தரப்பின் தலையாய கடமையிலிருந்து சாட்சியச் சட்டத்தின் பிரிவு 106 அதனை விடுவிக்காது என்பதை நீதிமன்றம் பின்வருமாறு வலியுறுத்தியுள்ளது: -

" 19. ...குற்றச்செயலானது, குற்றஞ்சாட்டப்பட்டவரால் மட்டுமே புரியப்பட்டது, வேறு எவராலும் அல்ல என்பதை பிழையின்றி முடிவுசெய்யக்கூடிய சங்கிலித் தொடர் போன்ற சூழ்நிலைகளை அரசுத்தரப்பு முழுமையாக மெய்ப்பிக்க குறைகூறத்தக்கவகையில் தவறிவிட்டது என்பதே நீதிமன்றத்தின் கருத்தாகும். சாட்சியச் சட்டத்தின் பிரிவு 106, குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை மெய்ப்பிக்கும் கடமையிலிருந்து அரசுத்தரப்பை விடுவிக்கும் நோக்கமுடையதல்ல என்பதால், மாநில அரசுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. மிஸ்ரா பிரிவு 106-ஐ சார்வுற்றதும் தவறானதாகும். ... "

12.9. மேற்கூறியவற்றைத் தவிர, **சாபித்ரி சமந்தாராய் -எதிர்- ஒடிசா மாநில அரசு, 2022 எஸ்.சி.சி. ஆன்லைன் எஸ்.சி. 673** என்ற வழக்கில் உள்ள இந்த நீதிமன்றத்தின் தீர்முடிவை நாங்கள் பயனுடைய வகையில் குறிப்பிடலாம். சூழ்நிலைச் சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்ட அவ்வழக்கில் சாட்சியச் சட்டத்தின் பிரிவு 106-ஐ பொறுத்தவரையில், குற்றஞ்சாட்டப்பட்டவர் வேறு நோக்கம் கொண்டிருந்தால், குறிப்பாக அவரே அந்த உண்மைகளை அறிந்திருப்பார் என்றால் அதை அவரே நிரூபிக்கவேண்டும். சூழ்நிலைச் சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு வழக்கில்,

குற்றத்திற்குட்படுத்தும் கேள்விக்கு குற்றஞ்சாட்டப்பட்டவர் பதிலளிக்காமல் தவிர் தாலோ அல்லது பொய்யான பதிலை அளித்தாலோ, அத்தகைய பதிலே சம்பவங்களின் சங்கிலித் தொடரில் ஒரு கூடுதல் இணைப்பாக ஆகிவிடும் என்றும் இந்த நீதிமன்றத்தின் மூவரமர்வு குறிப்பிட்டுள்ளது. இந்நீதிமன்றம் மற்றவற்றுக்கிடையே பின்வருமாறு கூறியுள்ளது:

> "19. எனவே பிரிவு 106, எவ்வகையிலும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை நிரூபிக்கும் பொறுப்பிலிருந்து அரசுத்தரப்பை விடுவிக்கும் நோக்கமுடையதல்ல என்றாலும், இது, சங்கிலித் தொடர் போன்ற சம்பவங்கள், அரசுத்தரப்பால் வெற்றிகரமாக மெய்ப்பிக்கப்படும் வழக்குகளுக்கும் பொருந்துகிறது, இதிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவர்மீது நியாயமான முடிவு எடுக்கப்படுகிறது, மேலும், சூழ்நிலைச் சாட்சியத்தின் அடிப்படையிலான வழக்குகளில், குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் குற்றத்திற்குட்படுத்து கேள்வி கேட்கப்படும்போது, அவர் அல்லது அவள் பதிலளிப்பதை தவிர்க்கும்போதெல்லாம் அல்லது உண்மையற்ற பதிலை அளிக்கும்போதெல்லாம், அத்தகைய பதிலே சங்கிலித்தொடர் போன்ற சம்பவங்களில் ஒரு கூடுதல் இணைப்பாக ஆகிவிடும்."

13. மேற்சொன்ன கோட்பாடுகளைக் கருத்திற்கொண்டு பார்க்கையில், சாட்சியங்களை முழுமையாக மறுமதிப்பீடு செய்வதென்பது இம்மேல்முறையீட்டின் வரம்பிற்குட்பட்டதல்ல என்பதை வலியுறுத்திக் கூறுகையில், இவ்வழக்கின் ஒருங்கியல்வான காண்முடிவுகளில் ஏதேனும் தலையீடு கோரப்படுமானால், நாம் அவற்றை ஆராயலாம்.

14. இவ்வழக்கில் சில அடிப்படை அம்சங்கள் அதிக கருத்து மாறுபாடுகளுடையவை அல்ல, அவை முக்கியமாக சூழ்நிலைச் சாட்சியங்களின்

அடிப்படையிலானவையாகும். மேல்முறையீட்டாளரின் கணவர் பெரும்பாலும் வெளிநாட்டில் வசித்து வந்தார், மேல்முறையீட்டாளர் பெரும்பாலும் தனது பெற்றோருடன் கொல்லக்குடியில் வசித்துவந்தார். அரசுத்தரப்பு வழக்குக் ஆதரவான அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகிய சாட்சிகளின் வாக்குமூலத்தின்படியும், அரசுத்தரப்பு வழக்குக்கு ஆதரவளிக்காமல் பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டுள்ள மேல்முறையீட்டாளரின் தந்தையான அ.சா.6-இன் கூற்றுப்படியும், 18.6.2007 அன்று மேல்முறையீட்டாளர் தனது தந்தை மற்றும் மகளுடன் கொல்லக்குடியிலிருந்து பெரம்பலூருக்கு வந்தார் என்பது மறுக்கத்தகாததாகும். மேல்முறையீட்டாளரின் மகளான மரணமுற்ற குழந்தை 21.6.2007 அன்று கொலை செய்யப்பட்டாள்.

15. இவ்வழக்கின் முக்கியப் பிரச்சினை யாதெனில், அ.சா.6-ஜமால் முகமதின் சாட்சியத்தின்படி, 20.6.2007 அன்று, அவர் பலியான குழந்தையை, அ.சா.1-பஷீராவின் வீட்டில் விட்டுவிட்டு, அவரது மகளுடன், அதாவது மேல்முறையீட்டாளருடன் கொல்லக்குடிக்கு திரும்பினார். அரசுத்தரப்பு வழக்குப்படி மேல்முறையீட்டாளர் பலியான குழந்தையுடன் பெரம்பலூரிலேயே இருந்தார், அவர், 21.6.2007 அன்று காலை அவரது மாமியார் (அ.சா.1) வீட்டை விட்டு வெளியே சென்றபோது குழந்தையின் கழுத்தை நெரித்து கொன்றுவிட்டார். அ.சா.6-ஜமால் முகமதின் கூற்றுப்படி, தொடர்புடைய சமயத்தில் மேல்முறையீட்டாளர் பெரம்பலூரில் இல்லை; குழந்தையின் மரணம் குறித்த தகவல் கிடைத்ததன்பேரில், அவர் 21.6.2007 அன்று பிற்பகலுக்குப் பிறகு அவருடன் சேர்ந்து பெரம்பலூருக்கு வந்தார்; அதன்பின்னர், அவர் கைது செய்யப்பட்டார் என்பதாகும். மற்ற அரசுத்தரப்பு சாட்சிகளும் குறுக்கு விசாரணையில் அதே கருத்துகளை தெரிவித்தனர். வேற்றிட வாதத்திற்கு வழிகோலிய இந்த அம்சங்கள், மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் குறிப்பிடப்பட்டு, சார்வுறப்பட்டன.

15.1. விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் ஆவணச் சான்றை ஆராய்ந்து, 20.6.2007 அன்று அ.சா.6-ஜமால் முகமது தனது மகளை கொல்லக்குடியிலுள்ள

தனது கிராமத்துக் கூட்டிச்சென்றார் என்ற அவரது கூற்றினை உறுதிசெய்யும் சான்று கோப்பில் இல்லை என்ற இவ்வழக்கின் முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களைக் குறிப்பிட்டு, வேற்றிட வாதத்தை நிராகரித்தன. குற்றஞ்சாட்டப்பட்டவரான மேல்முறையீட்டாளர் சம்பவம் நிகழ்ந்த சமயத்தில், தான் சம்பவ இடமான பெரம்பலூரில் இல்லை என்பதை நிரூபிப்பதற்கு எந்தச் சான்றும் அளிக்கவில்லை. சம்பவம் நடந்த நேரத்தில் மேல்முறையீட்டாளர் அந்த இடத்திலேயேதான் இருந்தார் என்ற கூற்றை அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் தொடர்ந்து கூறிவந்தனர் என்ற சங்கதியைத் தவிர, அ.சா.1-இன் வீட்டு உரிமையாளரான **அ.சா.4-ஷர்ஃபுனிஷா** மற்றும் அ.சா.1-இன் அண்டைவீட்டாரான அ.சா.5-திரு-ஜோதி ஆகிய இரண்டு தனிப்பட்ட சாட்சிகளும் சம்பவம் நடந்த உடனே, மேல்முறையீட்டாளர் அவ்விடத்திலேயே மரணமுற்ற குழந்தையின் சடலத்திற்கு அருகிலேயே அமர்ந்திருந்ததைக் கண்டதாகச் சாட்சியமளித்தனர். அ.சா.2 மற்றும் அ.சா.3-இன் சாட்சியங்களை நிராகரிப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை என்று வாதத்தின்பொருட்டு தோன்றினாலும், மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக சான்றுரைக்கக்கூடியவர்கள் அல்லாத சாட்சிகள், அவருடன் நேரடித் தொடர்புடையவர்களாக இருப்பதால், அவர்களது சான்றுரைகளை விட்டுவிட்டாலுங்கூட, அ.சா.4 மற்றும் அ.சா.5-இன் சாட்சியங்களை நம்பாமலிருப்பதற்கோ, நிராகரிப்பதற்கோ எந்தக் காரணமும் இல்லை. சம்பவம் நடந்த இடத்திலும், நேரத்திலும் மேல்முறையீட்டாளர் அங்கு இருந்ததைப் பற்றி சாட்சியமளிப்பதில் அ.சா.4 மற்றும் அ.சா.5 ஏன் ஆர்வம் காட்டுகின்றனர் என்பது குறித்து எதுவும் முரண்பட தெரிவிக்கப்படவில்லை.

15.2. மேற்கூறியவற்றைத் தவிர, 21.6.2007 அன்று சம்பவம் நடந்து ஒன்பது மணி நேரத்திற்குப் பிறகு, அதாவது சம்பவம் நடந்த நாளன்றே மேல்முறையீட்டாளர் பேருந்து நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டார் என்ற வழக்கின் சங்கதியுமுள்ளது. எனினும், மேல்முறையீட்டாளர் தன்னுடன் 20.6.2007 அன்று கொல்லக்குடிக்கு வந்தார் என்றும், பின்னர் 21.6.2007 அன்று பெரம்பலூருக்கு திரும்பினார் என்றும், அ.சா.6-ஜமால் முகமதால்

முன்வைக்கப்பட்ட கூற்று நிராகரிக்கப்படுகிறபோது, மற்ற அனைத்து சங்கதிகளையும் ஒன்றாக எடுத்துக்கொண்டால், அவை, வேற்றிடவாதம் நிராகரிக்கப்படவேண்டியது என்ற விவாதத்துக்குரிய முடிவுக்கு வழிவகுக்கின்றன.

16. மற்றொரு முக்கிய காரணியான, அ.சா.1-பஷீரா காவல்துறையில் அளித்த புகாரில் தெரிவித்தவற்றை நீதிமன்றத்தில் அவர் அளித்த சான்றுரையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அவரது கூற்றில் வெளிப்படும் சில முரண்பாடுகள் குறித்து மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் சிறப்புறக் குறிப்பிடப்பட்டு, விரிவாகக் கூறப்பட்டுள்ளது. தொடக்கத்தில், வழக்கில் சில முரண்பாடுகள் இருந்தன என்பதில் ஐயமில்லை என்றாலும், அது அ.சா.1-இன் சான்றுரை நம்பக்கூடியதா? இல்லையா? என்பதைக் குறித்து சில சந்தேகங்களை எழுப்பியது. இருப்பினும், அ.சா.1-பஷீராவின் கூற்றிலுள்ள முரண்பாடுகளாகக் கூறப்படும் அந்த முரண்பாடுகள் சாதாரணமானவை, இயல்பானவை அல்லது சரியாகப் புரிந்துகொள்ளாததன் காரணமாகவும் இருக்கலாம் என்பதாகவே பரிசீலிக்கப்படமுடியும் என்பது ஆவணத்தை கூர்ந்தாராய்ந்ததிலிருந்து தெளிவாகிறது.

16.1. அ.சா.1-பஷீரா, மேல்முறையீட்டாளரின் மாமியார் மற்றும் பலியான குழந்தையின் பாட்டியாவார். இவ்வழக்கிலுள்ள முதல் முரண்பாடு யாதெனில், புகாரிலுள்ள கூற்றில், அவர் காலையில் இட்லி வாங்குவதற்காக பணம் எடுக்காமல் வீட்டைவிட்டு சென்றுவிட்டார் என்பதாகும், ஆனால் அவரது சான்றுரையில், மேல்முறையீட்டாளர் அவரிடம் ரூ.100/- அளித்து இட்லி வாங்கிவரும்படி கூறியதாகத் தெரிவித்துள்ளார். மற்றொரு முக்கிய முரண்பாடாகத் தெரிவது யாதெனில், மேல்முறையீட்டாளர் சம்பவம் நடந்த இடத்திலிருந்து ஓடிவிட்டதாக அவர் புகாரில் உறுதிபடக் கூறியுள்ளார். ஆனால், அவரது வாக்குமூலத்தில், மேல்முறையீட்டாளர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாகக் கூறியுள்ளார். மூன்றாவதாக, அவர் சந்தைக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய பின்னர், என்ன பார்த்தார், என்ன செய்தார் என்பதை அவரது புகாரிலும்,

சான்றுரையிலும் வெவ்வேறுவிதமாகத் தெரிவித்திருந்தார். இந்த முரண்பாடுகளின் காரணமாக அவரது சாட்சியமும், அரசுத்தரப்பு வழக்கும் முற்றிலுமாக நிராகரிக்கப்படலாமா? என்பதே கேள்வியாகும்.

16.2. எங்களது கருத்துப்படி, விசாரணை நீதிமன்றம் வழக்கை சரியாக ஆராய்ந்து, 65 வயதுடைய அ.சா.1, விபத்து நடந்து ஒரு வருடம் கழித்து, நினைவுகூர்ந்து நீதிமன்றத்தின் முன்பு சான்றுரைத்தபோது, அத்தகைய முரண்பாடுகள், அவரது சாட்சியத்தை ஒட்டுமொத்தமாக நிராகரிப்பதில் முடிவுறாது என்று சரியாகக் கருத்துரைத்துள்ளது. பலியான குழந்தையை மேல்முறையீட்டாளரிடம் விட்டுவிட்டு, காலையில் உணவுப் பொருட்கள் வாங்குவதற்காக அவர் வெளியே சென்றார் என்றும், பின்னர் திரும்பிவந்தபோது, குழந்தை இறந்துகிடப்பதையும், அந்த இறந்த குழந்தை மேல்முறையீட்டாளரிடம் இருந்ததையும் பார்த்தார் என்பதும், அவரது வாக்குமூலத்திலும், புகாரிலும் தெரிகின்ற குறிப்பிட்ட அம்சங்களாகும். எங்களது கருத்துப்படி மேல்முறையீட்டாளரிடம் பணம் பெற்றுக்கொண்டோ அல்லது பணம் எடுத்துக்கொள்ளாமலோ அவர் சந்தைக்கு சென்றாரா? என்பதைப் பொறுத்தவரையில், அவரது சாட்சியத்தையும், பிற சாட்சிகளின் சாட்சியத்தையும் ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்துவிடமுடியாது. மேலும், மேற்படி சாட்சியான அ.சா.1, சம்பவத்திற்குப் பிறகு மேல்முறையீட்டாளர் காவல் நிலையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டார் என்று தனது சாட்சியத்தில் கூறியுள்ளபோது, அவர் சங்கதிகளின் தடத்தை இழந்துவிட்டார் என்பது தெள்ளத்தெளிவாகிறது. மேல்முறையீட்டாளர் பிற்பகலுக்குப் பிறகு, பேருந்து நிலையத்தில் கைது செய்யப்பட்டார் என்பது பதிவாவணத்தின் அடிப்படையில் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது, சம்பவம் நடந்த உடனேயே அவர் காவல் நிலையத்திற்கு கூட்டிச்செல்லப்பட்டார் என்பதாக எங்குமே காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக, அலுவல்முறை சாட்சியான அ.சா.10-சுப்புலட்சுமி தெரிவித்த கருத்தும், அவரால் திட்டவட்டமாக மறுக்கப்பட்டது. அ.சா.1-இன் கூற்றிலுள்ள முரண்பாடு முக்கியத்துவம்

வாய்ந்ததல்ல, மேலும், அந்தக் கூற்றின் அடிப்படையில் இரு நீதிமன்றங்களின் ஒருங்கியல்வான காண்முடிவுகளையும் மாற்றியமைக்கமுடியாது என்பதாகும். அ.சா.1, மேல்முறையீட்டாளர் குழந்தையின் கழுத்தை நெரிப்பதைப் பார்த்ததாக புகாரில் அளிக்கப்பட்டுள்ள கூற்று, சம்பவம் நடந்ததற்குப் பிறகு உடனடியாக அளிக்கப்பட்ட வெளிப்படையான கூற்று எனத் தெரிகிறது. சம்பவ இடத்தை அடைந்த மற்ற சாட்சிகள் உட்பட தனிப்பட்ட சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5, சம்பவம் நடந்தவுடன் மேல்முறையீட்டாளர் குழந்தையின் சடலத்துடன் அந்த இடத்திலேயே இருந்தார் என்பதையே தொடர்ந்து கூறிவந்தனர்.

16.3. ஒட்டுமொத்த வழக்கையும் கருத்திற்கொண்டு பார்க்கையில், அ.சா.1, உறுதியான முறையில் வழக்கை முன்வைக்கவில்லை என்பதால் ஒட்டுமொத்த அரசுத்தரப்பு வழக்கையும் நம்பாமல், நிராகரிப்பதற்கான எந்தக் காரணத்தையும் நாங்கள் காணவில்லை. தனிப்பட்ட சாட்சிகளைத் தவிர, அலுவல்முறை சாட்சிகளின் சாட்சியத்திலும், தொடர்புடைய அனைத்து சங்கதிகளும் முறையாக நிரூபிக்கப்பட்டுள்ளன. தற்போதைய வழக்கில் காணப்படும் முரண்பாடுகள், பெரும்பாலும், அற்பமான தன்மை கொண்ட சிறிய முரண்பாடுகளாகவோ, பொருந்தாததாகவோ, மிகைப்படுத்தப்பட்டதாகவோ இருக்கலாம்; சாட்சியத்தில் சிறிய முரண்பாடுகள் ஏற்படலாம் என்றும், அதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டியதில்லை என்றும் (மேற்படி) **பர்வாடா போகின்பாய் ஹிர்ஜிபாய்** என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் உரியவகையில் குறிப்பிடத்தக்கவையாகும்.

17. மேல்முறையீட்டாளர், பலியானவரின் கழுத்தில் அவரது சேலையைச் சுற்றி நெரித்துக் கொன்றார் என்ற கூற்று சடலக்கூறாய்வு அறிக்கையுடன் ஒத்துப்போகவில்லை, அந்தப் பணிந்துரையும் நிலைக்கத்தக்கதல்ல. குறிப்பிடப் பட்டுள்ளவாறு, குழந்தையின் கழுத்தைச் சுற்றி நெரித்ததன் காரணமாக, 20 செ.மீ. நீளமும், 2 செ.மீ. அகலமும் கொண்ட காயம் ஏற்பட்டது மற்றும் நாவடிக் குருத்தெலும்பு

முறிந்துவிட்டது என்று மருத்துவ அலுவலர்கள் தெளிவாக நிரூபித்துள்ளனர். புடவையின் முந்தானையை முறுக்கி, ஒரு நபரின் கழுத்தைச் சுற்றி நெரித்தால், அதுபோன்ற காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று அ.சா.8 கருத்துரைத்தார். பிரச்சினைக்குரிய புடவை, மேல்முறையீட்டாளரிடமிருந்து முறையாகக் கைப்பற்றப்பட்டது, அதில் இரத்தக் கறைகள் இருந்தன.

18. மேற்படி குறிப்பிடப்பட்ட சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளிலிருந்து, அரசுத்தரப்பால் கருத்துரைக்கப்பட்டுள்ள உள்நோக்கமானது, அதாவது, மேல்முறையீட்டாளருக்கு புகுந்த வீட்டில் வாழ்வதற்கு விருப்பமில்லை என்றும், குழந்தைக்காகவே கட்டாயத்தால் அவர் அங்கு இருந்தார் என்றும், குழந்தை வாழ்வதில் அவர் ஆர்வம் காட்டவில்லை என்ற ஏதோவொரு விதத்தில் கடினமான அறுதியுரையை முன்வைத்திருக்கும் அதேவேளையில், குறிப்பாக, 18.6.2007 வரை, மேல்முறையீட்டாளர் தனது பெற்றோருடன் வசித்துவந்தார் என்றும், அவரது கணவரின் குடும்பத்தினருடன் குழந்தையை வளர்ப்பதற்காக பெரம்பலூருக்கு வருமாறு கட்டாயப்படுத்தப்பட்டார் என்ற பொருண்மையையும் பார்க்கையில், அதை முற்றிலும் புறந்தள்ளிவிடமுடியாது.

19. மேல்முறையீட்டாளரின் கணவர் அரசுத்தரப்பால் விசாரிக்கப்படவில்லை என்று அவரது சார்பாக முன்வைக்கப்பட்ட மற்றொரு பணிந்துரை, வழக்கை மேற்கொண்டு எடுத்துச்செல்லாது. சம்பவம் நடந்த சமயத்தில் அவரது கணவர் இந்நாட்டில் இல்லை, மேலும், அரசுத்தரப்பால் நிரூபிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதிகளைப் பொறுத்தவரையில், அவர் ஒரு நேரடி சாட்சியல்ல. மாறாக, மேல்முறையீட்டாளர், அவரை ஒரு முக்கிய சாட்சியாகக் கருதினாலும், அவரை விசாரிக்கும்படி நீதிமன்றத்தில் அவர் முன்வைக்கும் வேண்டுரையை எதுவும் தடுக்காது, மேலும், கு.ந.ச., பிரிவு 313-இன் கீழான அவரது விசாரணையின்போது, அது தொடர்பான குறிப்பிட்ட பணிந்துரையைச் சமர்ப்பிப்பதிலிருந்து அவரை எதுவும் தடுக்காது.

20. கு.ந.ச., பிரிவு 313-இன் கீழான வாக்குமூலத்தைப் பொறுத்தவரையில், மேல்முறையீட்டாளர், தனக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளை மறுத்தாரேயன்றி, அவர் எந்தவித விளக்கமும் அளிக்கவில்லை, எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை. தற்போதைய வழக்கின் சங்கதிகளிலிருந்து, பலியான குழந்தை மேல்முறையீட்டாளருடன்தான் கடைசியாக உயிருடன் காணப்பட்டது என்ற சங்கதியை அரசுத்தரப்பு சாட்சியம் திட்டவட்டமாக நிரூபித்திருக்கும்போது, குழந்தையின் இறப்புக்கு வழிகோலிய சூழ்நிலைகள் குறித்து அவர் விளக்கவேண்டியிருந்தது. அவர் அவ்வாறு செய்யத்தவறியதாலும், மரணம் நிகழ்ந்த சூழ்நிலைகள் குறித்து அவர் விளக்கத் தவறியதாலும், சாட்சியச் சட்டம், பிரிவு 106-இன் பொறுப்பானது, மேற்குறிப்பிடப்பட்டுள்ள தீர்முடிவுகளிலிருந்து, குறிப்பாக (மேற்படி) **சத்பால்** மற்றும் **சாபித்ரி சமந்தாராய்** என்ற வழக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேல்முறையீட்டாளர் மீதே மிகவும் தீவிரமாகச் செயல்படுகிறது.

21. கோப்பிலுள்ள சான்றினை முழுமையாகப் புரிந்துகொள்வதன்பேரிலும், விசாரணை நீதிமன்றத்தாலும், உயர் நீதிமன்றத்தாலும் பதிவு செய்யப்பட்ட காண்முடிவுகளின் அடிப்படையிலும் நிரூபிக்கப்பட்டுள்ள ஒருங்கியல்வான சங்கதி முடிவுகளில் தலையிடுவதற்கான சந்தர்ப்பம் எதுவும் மெய்ப்பிக்கப்படவில்லை என்று நாங்கள் கருதுகின்றோம்.

22. மேற்படி சூழ்நிலைகளில், தற்போதைய வழக்கு, மரணம் விளைவிக்கும் குற்றம் கொலைக் குற்றமாகாது என்பதான வழக்காகத்தான் இருக்கமுடியும் என மாற்றுவகையில் வைக்கப்பட்ட வாதங்கள் நிராகரிக்கப்படவேண்டியவை என்பது குறிப்பிடத்தக்கது. மேல்முறையீட்டாளர், அவரது தந்தை இருக்கும் இடத்திற்கு போக விரும்பியதால், சம்பவம் நடந்த நாளன்று காலையில் அவரது மாமியாருடன் (அ.சா.1) சண்டையிட்டார் என்று எடுத்துக்கொண்டாலுங்கூட, அத்தகைய சண்டை, அதை கடுமையான மற்றும் திடீர் ஆத்திரமூட்டும் சந்தர்ப்பமாக ஆக்கும் எனக் கூறிவிட முடியாது.

பதிவாவணத்தின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ள சூழ்நிலைகள் மற்றும் குற்றம் புரிந்த முறை ஆகியவை தற்போதைய வழக்கை, இ.த.ச., பிரிவு 300-இன் விதிவிலக்குகளின் கீழ் கொண்டுவரமுடியாது என்றும், இ.த.ச., பிரிவு 302-இன் கீழான மேல்முறையீட்டாளரின் குற்ற மற்றும் தண்டனைத் தீர்ப்பை குறைகூறமுடியாது என்றும் தெளிவுப்படுத்தியுள்ளது.

23. மேற்சொன்ன கருத்துரைகளின்படி, இந்த மேல்முறையீடு தோல்வியடைவதால் தள்ளுபடி செய்யப்படுகிறது.

.....மாண்புமிகு நீதியரசர் திரு. தினேஷ் மகேஸ்வரி

.....மாண்புமிகு நீதியரசர் திரு. பேலா எம். திரிவேதி

புது தில்லி,
22.2.2023

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்கு உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."